*3*

# இரட்சிப்பு, விசுவாசத்தின் விளைவு [பாகம் 2]

## [2:1-10]

*இரண்டாவது அதிகாரம் தொடங்குகையில் பரிசுத்தமாயிருத்தல் பற்றிய பாடக்கருத்து தொடருகிறது. சகோதர அன்பும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலும் இன்றி பரிசுத்தமாயிருத்தல் இருக்க இயலாது. இத்துடன் கூடுதலாகப் பேதுரு, பரிசுத்தமாயிருத்தல் என்பது ஒரு மனநிலை அமைவு என்பதைத் தமது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். இது விசுவாசியின் மனச்சான்றில் ஊடுருவிப்பரவும் சிந்தித்தல் மற்றும் நடத்தல் ஆகியவற்றின் வழிமுறையாக உள்ளது. பரிசுத்தமாயிருத்தல் என்பது ஒரு மன அமைவாக உள்ளது, ஆனாலும் அதைக் காட்டிலும் அதிகமானதாகவும் உள்ளது. இது நடத்தையின் வழிமுறையாகவும் உள்ளது.*

### *"புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல" (2:1-3)*

***1**இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால் **2**சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, **3**நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.*

***வசனம் 1.*** *பேதுரு பயன்படுத்திய நிபந்தனை வாக்கியம், அதன் "ஆல்" பகுதி (நிபந்தனை) உண்மையாக உள்ளது என்பதை யூகிக்கிறது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் சொந்த அனுபவத்தில் இருந்து,* ***கர்த்தர் தயையுள்ளரென்பதை*** *தாங்கள்* ***ருசிபார்த்திருந்ததைக்*** *கூற முடியும் என்று பேதுரு யூகித்தார்.* NRSV *வேதாகமம்* "if indeed you have tasted that the Lord is good." *என்ற சொற்றொடரைக் கொண்டு இவ்வார்த்தைகளின் கருத்துணர்வை பிடித்துவைக்கிறது. இந்தச் சொற்றொடரை "கர்த்தர் தயவுள்ளவர் என்று நீங்கள் ருசிபார்த்து இருப்பதால்" என்று மொழிபெயர்த்தால், அது இலக்கைத் தவற விடாது. எப்போதுமே பகுத்தறிதல் கொண்டிருத்தல் என்ற உருவகமான பாலைக் கொண்டு இரட்சிப்பு போஷிக்கப்பட்டிருந்தது, ஆனால் அதுவேஎல்லாமுமாகஇருக்கவில்லை.அவர்கள்(1)தாங்கள்புதிதாய்ப்பிறந்ததையும் (2) கர்த்தர் தயவுள்ளவர் என்ற தங்கள் அனுபவத்தையும் சிந்தித்துப் பார்க்கையில், அவர்களின் இரட்சிப்பு அதிக நிச்சயமானதாகவும் அவர்களின் விசுவாசம் அதிகம் சுய திருப்தி உள்ளதாகவும் ஆயிற்று. சங்கீதம் 34:8ம் வசனம்,*

*1 பேதுரு 2:2ன் உணர்வை ஒரு கட்டளை என்ற வகையில் அளிக்கிறது: "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." மீண்டும் 3:10-12ல் பேதுரு சங்கீதம் 34ஐ ம றுகண்ணோட்டமிட்டிருந்தார்.*

*கிறிஸ்தவர்கள் கர்த்தரை அனுபவிக்கப் பல வழிகள் உள்ளன. விசுவாசிகள் அவரது வல்லமை அல்லது அவரது இரக்கம் அல்லது அவரது கோபம் என்பதை ருசிபார்க்கலாம். சங்கீதக்காரர் கர்த்தருடைய வார்த்தைகளின் இனிமையை அனுபவித்தார்: "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமை யானவைகள்" (சங்கீதம் 119:103). யோபு பெருந்துன்பத்தை ருசிபார்த்தார்: "என் நாவிலே அக்கிரமம் உண்டோ? என் வாய் ஆகாதவைகளைப் பகுத்தறியாதோ?" (யோபு 6:30). தேவனுடன் பேதுருவின் வாசகர்களுக்கு உண்டான அனுபவங்களைப் பற்றிப் பொதுவாகப் பேசும்போது, "கர்த்தருடைய தயவு" என்ற வார்த்தையே அவரது சிந்தைக்கு வந்தது, அதையே அவர் பயன்படுத்த விரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பின்தொடரும் வசனங்களில் பேதுரு, நசரேயனாகிய இயேசுவையே "கர்த்தர்" என்று அழைத்தார். அப்போஸ்தலரின் வாசகர்கள் இயேசுவை அறிந்தி ருந்தபடியால், அவர்கள் தேவனுடைய தயவை ருசிபார்த்திருந்தனர்.*

*பேதுருவின் வாசகர்களினால் சகிக்கப்பட்டிருந்த உபத்திவத்தின் சந்தர்ப்பப் பொருளில் பார்க்கும் போது, அப்போஸ்தலர் கர்த்தருடைய சிட்சையை அல்லது கர்த்தருடைய சினத்தைப் பற்றிப் பேசினார் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். "தயவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள chrestos, என்ற வார்த்தை, "கிறிஸ்து" என்பதற்கான Christos, என்ற வார்த்தையின் எழுத்து ம ற்றும் ஒலி ஆகியவற்றில் ஒத்துப்போகிறது. அடிமைகளின் உரிமையாளர்கள் சிலவேளைகளில் தங்கள் அடிமைகளுக்கு, "தயவு" என்று அர்த்தப்பட்ட chrestos, என்ற பெயரை இட்டனர். முற்காலத்தில் இருந்த ரோம எழுத்தாளர்கள் சிலர், கிறிஸ்தவத்தைப் பற்றி அறிந்தநிலையில் இவ்வார்த்தைகளைக் குழப்பினர். அவர்கள் அடிமையின் பெயர்கொண்ட ஒரு கடவுளைக் கிறிஸ்தவர்கள் ஆராதித்ததாக நினைத்தனர். "தயவு" என்ற பெயரை இயேசு மனப்பூர்வமாகச் சூட்டிக்கொண்டாரா என்பதைப் பற்றி ஒருவர் சந்தேகப்படுகிறார். கர்த்தர் தயவுள்ளவர் என்பதே பேதுரு தமது வாசகர்களிடம் எதிர்பார்த்த உலகளாவிய அனுபவமாக இருந்தது.*[1]

*__வசனம் 2.__ கிறிஸ்தவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் மூலம் தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரித்து இருப்பதால், அவர்கள் அழிவில்லாத வித்தினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருப்பதால், அவர்கள் தங்களைத் தேவன் ஏற்படுத்தியபடியே பரிசுத்தமான மக்களாக இருக்க வேண்டும். "நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத் தேவன் உங்களை உண்டாக்கினாரோ, அவ்வாறே இருங்கள்" என்பது புதிய ஏற்பாட்டின் மற்றொரு இடத்திலும் காணப்படும் ஆய்வுக்கருத்தாகும் (உதாரணம ாக, ரோமர் 12:1, 2). பரிசுத்தமாயிருத்தல் என்பது, விசுவாசிகள் __சகல துர்க்குணத்தையும், சலகவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விடுதல்__ என்பதையும் கேட்கிறது. இப்படிப்பட்ட வழியான வாழ்வைப் புறம்பே தள்ளி ஒழித்துவிடுதல் என்பது இலேசாக எடுத்துக்கொள்ளக் கூடிய விஷயம்*

*அல்ல. இது பேதுருவின் வாசகர்களை, அவர்கள் தங்கள் முன்னோர்களிடம் இருந்து சுதந்தரித்துக் கொண்டிருந்த பழைய வாழ்வைக் (1:18). அவர்களின் சமகாலத்தவர்களால் தொடர்ந்து தழுவிக் கொள்ளப்பட்டிருந்த வாழ்வை கைவிடும்படி கேட்டுக் கொண்டது. ஒரு மனிதர் தமது உடைகளைக் களைந்து போடுதல் போன்று அவர்கள் தங்கள் பழைய வாழ்வைக் களைந்து போட வேண்டும் என்று அவர்களைப் பேதுரு கேட்டுக்கொண்டார். கர்த்தர்மீது விசுவாசம் கொண்டிருத்தல் மாத்திரம் அல்ல, ஆனால் அவரைப்போன்று வாழவேண்டும் என்று புதிய கிறிஸ்தவர்களைப் பவுல் வேண்டிக் கேட்டுகொண்ட போது, இதே பேச்சு உருவகத்தை, "களைந்துபோடுதல்" என்ற இதே வார்த்தையையும் கூட அவர் பயன்படுத்தியிருந்தார் (எபேசியர் 4:22-24; கொலோசெயர் 3:8-10).*

*ரோமர் 6:3, 4ல் பாடக்கருத்து வேறுபட்டிருப்பதில்லை. அங்கு, விசுவாசிகள் பரிசுத்த வாழ்வை வாழும்படி வேண்டிக் கேட்டுக்கொள்வதற்குப் பவுல், மரணத்தையும் மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுதலையும் பயன்படுத்தினார். ரோமர் 6ல் பவுல் எழுதியது போன்றே, பேதுரு தமது வாசகர்களுக்கு அவர்களின் ஞானஸ்நானம் பற்றிய தனிச்சிறப்பை நினைவூட்டினார். பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கையில் பேதுரு மிகவும் மறைவாகக் குறிப்பிட்டார். பவுலைப் பொறுத்தமட்டில் "பழைய பாவமனிதனுக்கு மரித்தல்" என்பது எதைத் குறிப்பிட்டதோ அதையே, பேதுருவைப் பொறுத்தமட்டில், "மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல்" (1:3, 23) மற்றும் "புதிதாய்ப்பிறந்த குழந்தைகள்" (2:2) ஆகிய இரண்டும் குறிப்பிட்டன என்பது நிச்சயம். பேதுருவின் வாசகர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருந்ததால், அவர்கள் பழையவற்றைப் பின்விட்டுச் செல்ல வேண்டும் என்று அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார். சாராம்சத்தில் அவர், "நீங்கள் பழைய மனிதனைக் களைந்து போட்டுள்ளதால், தொடர்ந்து பழைய மனிதனாக இராதீர்கள். நீங்கள் என்னவாக வேண்டும் என்பதற்காகத் தேவன் உங்களைப் படைத்தாரோ, அவ்வாறே இருங்கள்" என்று கூறினார்.*

*நேர்மறை மற்றும் எதிர்மறை நடக்கை ஆகிய இரண்டையுமே, வார்த்தைகளின் பட்டியலைக் கொண்டு, புதிய ஏற்பாடு பொதுவாகத் தொகுத்துரைக்கிறது. இந்த நிருபத்தின் இன்னொரு இடத்தில் பேதுரு இவ்வழிமுறையைப் பயன்படுத்தினார் (3:8, 9; 4:3, 15; 5:2, 3). பவுலும்கூட இப்படிப்பட்ட தொகுப்புரைப் பட்டியலை அடிக்கடி பயன்படுத்தினார் (ரோமர் 1:29-32; 2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:19-23). எந்த ஒரு விஷயமும், பேதுருவின் வாசகர்களைப் பண்புப்படுத்தியதாக அவர் அறிந்திருந்த காரணத்தினால், அவர்கள் அதைக் குறிப்பாக நீக்கிப்போட வேண்டும் என்று அந்த விஷயத்தைப் பேதுரு தேர்ந்தெடுத்து இருக்க வாய்ப்பில்லை. அவைகள் மக்களின் பெரும்பான்மையான குழுக்களை விவரித்தலைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பேதுருவின் வாசகர்களை விவரிப்பதில்லை. விசுவாசிகளின் கூட்டத்திற்குள் கலகத்தைக் தூண்டும் குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டுள்ளதால் அவற்றை அவர் பட்டியலிட்டார். அந்தக் கருத்தமைவில், இந்தப் பட்டியல் 1:22ன் பின்தொடர்ச்சியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரைத் தங்கள்*

இருதயத்தில் இருந்து உண்மையாக அன்புகூர வேண்டியிருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் அன்புகூர்ந்த காரணத்தால், அவர்கள் இப்படிப்பட்ட வகையான விஷயங்களைத் தங்களிடத்தில் இருந்து அகற்றிப்போட வேண்டி இருந்தது. பேதுரு பயன்படுத்திய ஒவ்வொரு வார்த்தையும் போதுமான அளவுக்கு ஆராயப்பட பல பக்கங்கள் கொண்ட விளக்கங்கள் தேவைப்படும். இவை பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருகிறது:

"துர்க்குணம்" (*kakia*) என்பது பெரும்பாலும், ஒழுக்கநெறிக்கு எதிராக அமைவுபெற்றுள்ள பொல்லாங்கான தன்மைக்கான பொதுவான வார்த்தையாக உள்ளது. இது ஒழுக்கரீதியாக சீர்கேடு என்பதை மனதிற்குக் கொண்டுவருகிறது. பக்குவமற்ற, வடிவுசிதைந்த ஒழுக்க இயல்பிற்கான ஒரு வார்த்தையை, மற்றவர்களை பொல்லாத எண்ணம் அல்லது விருப்பத்தோடு கண்ணோக்கும் மன இயல்பிற்கான ஒரு வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தினார். யாக்கோபு, இவ்வார்த்தையை "ஏராளமான" [''abundant''] அல்லது "முழு அளவும்" [''the full extent of''] என்று அர்த்தப்படும் பெயர் உரிச்சொல்லைப் பயன்படுத்தினார் (யாக்கோபு 1:21). இது தமிழ் மொழியில் "எல்லாவித" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பேதுரு செய்தது போன்று, யாக்கோபு இதே வினைச்சொல்லைப் பயன்படுத்தி, ஆடையைக் களைவது போன்று களையப்பட வேண்டிய பொல்லாங்கான குணங்களின் முழு வீச்சு பற்றி எழுதினார். "துர்க்குணம்" (*dolos*) என்பது எல்லாவிதமான வஞ்சகமான ஏமாற்று வேலையையும் உள்ளடக்குகிறது. இது சூழ்ச்சியை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. இயேசுவைப் பற்றிய வகையில், அவரே கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய மாதிரியாக இருக்கிறார், "அவரது வாயில் வஞ்சனை காணப்படவில்லை" என்று பேதுரு கூறினார் (2:21, 22).

"கபடம்" (*hupokrisis*) என்ற வார்த்தை உலகப்பிரகாரமான கிரேக்க சமூகத்தில், ஒரு மேடையின் மீது இருக்கும் நடிகருக்குப் பயன்படுத்தப்பட்டது. ஒரு பாத்திரத்தில் ஏற்று நடித்தல் என்பதே இதன் நேரடிப்பொருளாகும். இயேசு, தம்மை எதிர்த்து நின்ற போதகர்களை "மாய்மாலக்காரர்கள்" என்று அழைத்தார். அவர்கள் செய்தவை, அவர்கள் தங்களைப் பற்றி அறிவித்துக் கொண்டதற்குச் சீர்பொருத்தமாக இருக்கவில்லை (மத்தேயு 23:13-33). மாய்ம ாலம் என்பது வெளிப்படையாக அறிவிக்கப்படாத நோக்கம் (1 தீமோத்தேயு 4:2) மற்றும் ஒருவர், தாம் கொண்டிராதவற்றைக் கொண்டிருத்தலாக நடிக்கக் காரணமான மனநிலை (கலாத்தியர் 2:13) ஆகிய இரண்டையும் குறிக்கப் பயன்படுகிறது. [''Envy''] "பொறாமை" (*phthonos*) என்பது, அர்த்தத்தில் [''jealousy''] "ஐயுறவு" என்பதைப் போன்றதாக இருந்தாலும். அதே விதம ானதாக இருப்பதில்லை. ஐயுறவு என்பது மற்றொருவர் கொண்டுள்ள பொருள்கள் அல்லது பண்புகளை ஒருவர் விரும்பும் காரணத்தினால் கொண்டுள்ள பொல்லாத மனவிருப்பமாக இருந்தால், பொறாமை என்பது, இன்னொரு நபர் கொண்டுள்ள ஆசீர்வாதங்கள், திறன்கள், அங்கீகாரங்கள் அல்லது புகழ்ச்சி ஆகியவற்றின் வெறும் உண்மையினாலேயே ஏற்படுகிற பொல்லாத மனவிருப்பமாக உள்ளது. "புறங்கூறுதல்" (*katalalia*) என்பது இன்னொருவரை, வாய்மொழியாகத் தூற்றுதலாக, (பொய்யாக அல்லது வேறுவிதமாக) புகழ்ச்சியைக் குறைத்தலாக உள்ளது.

1:22ல் அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக்கொண்ட "சுத்த

*இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருதல்" என்பதற்கு ஒவ்வாத அவர்களின் தன்மையே இவ்வார்த்தைகள் யாவற்றிற்கும் பொதுவான காரணியாக உள்ளது. இருப்பினும் அவர்கள் மற்ற அக்கறைகள் கொண்டிருந்தனர் என்பதற்கு வாய்ப்புள்ளது. பேதுரு குறிப்பிட்ட இந்தக் கிறிஸ்தவர்கள் அநீதியான வகையில் துன்புற்றுக் கொண்டிருந்தனர், அது அவர்கள் தங்களைத் துன்புறுத்தியவர்கள் மீது, துர்க்குணம் கொண்ட நிலை, புறங்கூறுதல், பொறாமை கொள்ளுதல் மற்றும் வெறுத்தல் ஆகியவற்றைக் கொண்டு பதில் செயல் செய்யும்படி அவர்களைச் சோதித்தது. அவர்கள் இந்த உணர்வுகளை எந்த அளவுக்குத் தங்களுக்குள் தேக்கி வைத்திருந்தார்களோ, அந்த அளவுக்கு ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டிருந்தனர். இவைகள் பாவியையே அழித்துப் போடுகிற பாவங்களாக உள்ளன.*

*இத்துடன் கூடுதலாக சிலவேளைகளில், ஒருவர் மற்றவருக்கு எதிராக உள்ளாகத் திரும்புதல் மற்றும் தவறாக நடத்துதல் ஆகியவற்றிற்கு, புறம்பே தவறாக நடத்தப்படுதலின் அழுத்தங்கள் காரணமாகின்றன. விசுவாசிகள் தங்கள் சலிப்புகளில் சிலவற்றை, கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆகியோரை நோக்கித் திருப்புதல் என்பது மிகவும் அரிதாகவே, கற்பனைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. புறங்கூறுதல், வஞ்சனை மற்றும் உண்மையற்ற தன்மை ஆகியவை, பேதுரு அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்த சகோதர அன்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும். கிறிஸ்தவர் அல்லாதவர்களுடனோ அல்லது ஒருவர் மற்றவருடனோ, விசுவாசிகள் கொண்டிருந்த உறவுமுறையில், அவர்கள் இந்த உலகத்து மக்களைப் பண்புப்படுத்தி வாழ்வின் வழிகளைக் கைவிட வேண்டியிருந்தது. அவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழ வேண்டியிருந்தது (1:15, 16). பரிசுத்தமாக வாழுதல் என்பது, கிறிஸ்தவர் அல்லாதவர்களுடனான அவர்களின் தொடர்புகள் மற்றும் விசுவாசிகள் கொண்ட சபையாகிய சரீரத்திற்குள் அவர்களின் உறவுகள் ஆகிய இரண்டிலும் தேவபக்தியுடன் அவர்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்திற்று. பரிசுத்தமாக வாழுதல் என்பது இங்கு பேதுரு பட்டியல் இட்டுள்ள எந்த குணத்துடனும் ஒத்துப்போகாததாக இருந்தது.*

***வசனம் 3.*** *பேதுரு 1:23ல் தாம் தொடங்கியிருந்த ஜெநிப்பிக்கப்படுதல் என்ற ஒப்புவமைக்குத் திரும்ப வந்தார். அந்த அளவுக்கு இது தெளிவாக உள்ளது. இருப்பினும் 1 பேதுரு நிருபத்தைப் படிக்கும் மாணவர்களில் சிலர், "ஒழித்துவிட்டு" (2:2) என்ற சொற்றொடரும்* **புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருத்தலும்,** *பேதுரு எழுதிய ஆசியாவின் சபைகளில் அப்போது இருந்த ஒரு நடைமுறையை விவரிக்கிறது, ஆனால் இது இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்த சபையின் ஆதார மூலங்களில் இருந்து நன்கு அறியப்படுகிறது என்று நம்புகின்றனர். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திற்குப் பின்பு, குறைந்தபட்சம் இல இடங்களில், ஞானஸ்நானம் பெற்றவர்கள் துணியெதுவும் அணியாமல் அதைப் பெற்றனர் என்று அறிகிறோம். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவர்களுக்குப் புதிய சுத்தமான உடை தரப்பட்டது.* J. N. D. *கெல்லி அவர்கள், இந்த நடைமுறை "மன ஈர்ப்புள்ள ஒரு சடங்கை ஏற்படுத்திற்று" என்ற கருத்தைக் கொண்டிருந்தார். பழைய உடைகளை களைந்து போட்டு, புதிய உடைகளை*

*அணிதல் என்பது "[ஞானஸ்நானம் பெறும்] அவர்/அவள் தனது கடந்தகாலத்தின் தகுதியற்ற வாழ்வைக் கைவிட்டு அறியாக்குழந்தைப்பருவம் போன்று ஒரு புதிய வாழ்வை ஏற்றுக்கொள்ளுதலின் அடையாளங்களாக" இருந்தன.*[2] *கெல்லி அவர்களின் விவாதங்கள் இலேசாக ஒதுக்கப்பட இயலாதிருக்கையில், இவ்வசனப்பகுதியை மிகவும் அதிகமான நேரடியான அர்த்தத்தில் வலியுறுத்தி, இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் வளர்க்கப்பட்டிருந்ததான, ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர் உடைகளைக் களைதல் என்ற பாரம்பரியம், இவ்வசனபகுதி இந்த நடைமுறையைப் பிரதிபலிப்பதாகக் கூற வாய்ப்புள்ளது.*

*அவர்கள் பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தாலும் அல்லது கிறிஸ்தவர்கள் ஆகி, ஒரு சில நாட்களே கடந்திருந்தாலும், அவர்கள்* ***திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்க வேண்டியிருந்தது,*** *"வாஞ்சையாயிருங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள epipotheō என்ற வினைச்சொல் பலத்த சொல்லாக உள்ளது. இது ஒரு தாயின் மார்பில் இருந்து தனக்கு வேண்டிய பாலைப் பெற, பசியுடன் உள்ள குழந்தைபோன்று சக்தியுடன் ஏங்குதல் என்று அர்த்தப்படுகிறது. கிறிஸ்தவராக இருத்தலுக்கு ஒருவர் வளருதல் தேவைப்படுகிறது இயல்பான இந்த உடல் வளர உணவு அளிக்கப்படுதல் அவசியமாயிருப்பது போன்றே, ஆவியும் போஷிக்கப்பட வேண்டும். வளராதிருத்தல் என்பது கிறிஸ்தவருக்கு விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. ஒரு விசுவாசி வளருவார் அல்லது அவர் [ஆவிக்குரிய வகையில்] மரித்துப் போவார். வசனத்தின் மூலமாக அவர்களுக்குள் துரிதப்படுத்தப்பட்டிருந்த தேவபக்தியுள்ள ஏக்கங்கள், போஷிப்பில்லையேல் மரித்துப் போய்விடும். சுவிசேஷத்தினால் போஷிக்கப்படுவதன் மூலம் அவர்கள் வளருவார்கள். இதே போன்ற ஒரு குறிப்புடன் பேதுரு தமது இரண்டாவது நிருபத்தை முடித்தார்: "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" (2 பேதுரு 3:18).*

*"களங்கமில்லாத பால்" என்பதே கிறிஸ்தவர்கள் வாஞ்சையாயிருக்க வேண்டிய விஷயமாக உள்ளது. "களங்கமில்லாத" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, இதற்கு முந்திய வசனத்தில் "கபடம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு நேரடியான எதிர்வார்த்தையாக உள்ளது. ஆங்கில மொழியில் பிடிக்கக் கடினமான வார்த்தை விளையாட்டு ஒன்றை, அப்போஸ்தலர் இங்கு பயன்படுத்தினார். 2:2ல் பேதுரு, தமது வாசகர்கள் சகல "கபடத்தையும்" அல்லது "வஞ்சகத்தையும்" (dolos) ஒழித்துவிட வேண்டும் என்று கூறியிருந்தார். 2:3ல் அவர்கள் "களங்கம் இல்லாத" (adolos) பாலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும் என்று கூறினார். அவர்களைப் போஷித்த, வசனமாகிய பால் சகல "களங்கத்தில்" இருந்தும் நீங்கலாக இருந்தது, அதாவது அது "சுத்தமானதாக" இருந்தது. பேதுருவின் வாசகர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்த சுவிசேஷம் (1:25) சுத்தமானதாக, கபடத்தில் இருந்து நீங்கலானதாக, களங்கம் இல்லாததாக இருந்தது. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் மற்ற போதகர்களும் அது எவ்வாறு இருக்கும்படி முன்நிறுத்தினார்களோ, அதைக்காட்டிலும் அதிகமானதாகவோ அல்லது குறைவானதாகவோ அது இருக்கவில்லை*

என்ற காரணத்தினால், அது களங்கமில்லாததாக இருந்தது. கபடத்திற்குப் புகழ்பெற்ற போதகர்கள்/தத்துவஞானிகள் ஆகியோர் கிரேக்க - ரோமானிய சந்தையிடங்களுக்கு அடிக்கடி வந்தனர். இப்படிப்பட்ட போதகர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களுக்கும் இடையில் குழப்பம் எதுவும் இருக்கக் கூடாது என்று பேதுரு விரும்பினார்.

"திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்" என்று தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர், NASB வேதாகமத்தில் "pure milk of the word" என்று தரவழைக்கப்பட்டுள்ளது, இது NRSV மற்றும் NIV வேதாகமங்களில் "pure spiritual milk" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. NASB வேதாகமம் KJV வேதாகமத்தைப் போன்றே இந்தச் சொற்றொடரைத் தரவழைக்கையில், அது நவீன மொழிபெயர்ப்புகள் மத்தியில் தனித்துச் சிறப்புடன் நிற்கிறது. "திருவசனமாகிய" (NASB) அல்லது "ஞான" (NRSV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *logikos* என்ற சொற்றொடரானது, ஒரு விஷயம் கவனமாக முழுமையும் சிந்திக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தும் பெயர் உரிச்சொல்லாகும்; எனவே இது பகுத்தறிவுடையதாக அல்லது சிந்தனை நிரம்பியதாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை காணக்கிடக்கும் இன்னும் ஒரே ஒரு இடமான ரோமர் 12:1ல் இது, தேவனுக்கு ரோமானியக் கிறிஸ்தவர்கள் ஏறெடுக்க வேண்டிய ஆராதனை ஊழியத்தின் வகையை விவரித்தது. அவர்கள் "புத்தியுள்ள ஆராதனையை" ஏறெடுக்க வேண்டியிருந்தது, இது அவர்கள் தங்கள் ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருக்க வேண்டும் அல்லது அவர்களின் ஊழியம் ஆவிக்குரிய ஊக்குவிப்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்திற்று. *Logikos* என்பது, பகுத்தறிவு சார்ந்த மற்றும் சிந்தனை நிறைந்த என்பவை பொருள்சாராக் கருத்துக்களாக இருந்ததால், அதன் விரிவாக்கமானது, நேரடி அர்த்தத்தின் கருத்தணர்வு இன்றி ஆவிக்குரிய வகையிலுள்ள பொருள் என்று கூறப்படலாம்.[3] 1 பேதுரு 2:3ன் சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை, நியாயமான, பகுத்தறிவான மற்றும் சிந்தனை நிறைந்த வலிவை அதிகம் கொண்டுள்ளதா அல்லது ஆவிக்குரிய மற்றும் நேரடிப் பொருளற்ற கருத்தைக் கொண்டுள்ளதா என்பதே மொழிபெயர்ப்பாளர்களுக்கான கேள்வியாக உள்ளது. முந்திய கருத்திற்கு NASB வேதாகமம் மிகச்சிறப்பானது என்றால், பிந்தியதற்கு NRSV மற்றும் NIV வேதாகமங்கள் மிகச்சிறப்பானவையாக உள்ளன.

NASB வேதாகமம், நல்ல காரணத்தைக் கொண்டு, "சுத்தமான, நியாயமான பால்" என்பது போன்ற சொற்றொடர்களைக் கைவிட்டுள்ளது. அதற்குப்பதிலாக, "pure milk of the word" என்ற சொற்றொடரைக் கொண்டு, பகுத்தறியும் சிந்தனையின் கருத்தைப் பிடிக்க, மொழிபெயர்ப்பாளர்கள் முயற்சிசெய்துள்ளனர். *Logos* மற்றும் *rhema* ஆகியவற்றின் உடனடி சந்தர்ப்பப் பொருளில் பேதுருவின் பயன்பாடு, இவ்விரு சொற்களையும் "வார்த்தை" என்று மொழிபெயர்த்துள்ளது, இது இவ்வசனத்தில் உள்ள *logikos* என்பது காரணம் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் கருத்தைக் கொண்டுள்ளது என்று விவாதிக்கிறது. மற்றும் நேரடி அர்த்தமற்ற வகையில் பேசப் பேதுரு விரும்பியபோது, அவர் *pneumatikos* என்ற இன்னொரு வார்த்தையைப் பயன்படுத்தினார். அப்போஸ்தலர் பேதுரு, 1 பேதுரு 2:5ல்

*"ஆவிக்கேற்ற பலிகள்" என்பதைக் குறிப்பிட்ட போது இந்த வார்த்தையையே பயன்படுத்தினார். கடைசியாக, யாக்கோபு மற்றும் பேதுரு ஆகியோருக்கு இடையிலான உறவு நேரடியான இலக்கியச் சார்பு கொண்டிராதிருக்கையில், இவ்விரு நிருபங்களும் ஒரே சிந்தை கொண்ட உலகத்தில் இருந்து வந்துள்ளன. இவ்வார்த்தையை யாக்கோபு பயன்படுத்திய வழியானது, இதைப் பேதுரு பயன்படுத்திய வழியைப் புரிந்துகொள்ள நமக்கு உதவக்கூடும். யாக்கோபு தமது புத்திமதியைத் தொடர்ந்து, "உங்களை உள்ளத்தில் நாட்டப்பட்டதா ... யுமிருக்கிற வசனத்தை ... ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறி தேவபக்தி யற்ற நடக்கையைப் புறம்பே தள்ளும்படி கூறினார் (யாக்கோபு 1:21). இந்த ஆலோசனைகள் NASB வேதாகம மொழிபெயர்ப்புக்கு ஆதரவாக அளவீடுகளைத் தொடுகின்றன.*

*பேதுரு, logikos என்ற வார்த்தையினால் தரப்படும் சிறு நுட்ப வேறுபாடுகளின்மீது சொல்லாடல் செய்ய விருப்பம் கொண்டிருக்கலாம். அவர்கள் ஏங்க வேண்டியிருந்தது ஆவிக்குரிய பாலாக, அதாவது பொருள்வகையில் இல்லாததாக, ஆனால் பகுத்தறியக் கூடியதாக இருந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கைக்கு ஒரு காரணத்தைக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பேதுரு வலியுறுத்தினார் (3:15). அவரது வாசகர்கள் கேள்விப்பட்ட செய்தியானது அவர்களின் உணர்வுகளுக்கு அதிகமாய் வேண்டுகோள் விடுத்தது. அது எபிரெய வேதவசனங்களின் ஆதரவையும் கிறிஸ்தவ தீர்க்கதரிசிகள் மற்றும் பிரசங்கியார்களுக்குத் தரப்பட்ட வாய்மொழி சாட்சியங்களின் ஆதரவையும் கொண்டிருந்தது (1:12, 25). தேவனுடைய வெளிப்படுத்துதல் என்ற பாலினால் போஷிக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் வாஞ்சையாக இருக்கும்போது, **"இரட்சிப்பின் அம்சத்தில் நீங்கள் வளரும்படி"** என்பதே பேதுருவின் சாட்சியமாக இருந்தது.*

*"இரட்சிப்பு" என்பது தேங்கி நிற்கும் பண்பு அல்ல என்பதை அப்போஸ்தலர் தெளிவாக்கினார். ஒருவர் புதிய காலணி ஜோடி ஒன்றைப் பெற்று அதன்பின்பு அவற்றைப் பயன்படுத்துதல் போன்று இரட்சிப்பைப் பெறுவதில்லை. பேதுருவின் வாசகர்கள் ஆட்டுட்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப் பட்டிருந்தாலும், அவர்கள் "இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் இன்னும் வளர" வேண்டியிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அதிகமாய் அறிவதும், அவர்மீது இன்னும் முழுமையாகத் தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைப்பதும் அவசியமாயிருந்தது. அவர்கள் 2:2ல் பட்டியலிடப்பட்டுள்ள குணங்களை ஒழிப்பதன் மூலம் கர்த்தரைப் போலாவதில் வளர வேண்டி இருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவரின் வார்த்தைகளில் கூறுவதென்றால், **"ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம்விட்டு ... பூரணராகும்படி கடந்துபோவோமாக"** (எபிரெயர் 6:1). பேதுருவின் வாசகர்களுக்கு, கிறிஸ்தவத் தீர்க்கதரிசிகளும் போதகர்களும் இரட்சிப்பை அறிவித்திருந்தனர் (1:12, 25), ஆனால் அவர்கள் இன்னமும் வளர வேண்டியிருந்தது. சிறு பிள்ளைகளுக்குப் போல் அவர்களுக்குப் பால் தேவைப்பட்டது. அவர்கள் பெற்றுக்கொண்ட செய்தியானது, நேரடி அர்த்தத்தில் அல்ல ஆனால் ஆவிக்குரிய வகையில் பாலாக இருந்தது, ஆனால் அது அவர்களின் காரண*

*அறிவுக்கு வேண்டுகோள் விடுத்த செய்தியாகவும் இருந்தது, இது காரணத்திற்கு வேண்டுகோள் விடுத்ததால், இது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வேண்டியவற்றை அளித்தது.*

## கிறிஸ்து, ஜீவனுள்ள கல்; கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய வீடு (2:4-8)

**[4]மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், [5]ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். [6]அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. [7]ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; [8]அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.**

*பின்தொடரும் வசனங்களில், கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வு என்ற கருத்தில் இருந்து கல் என்ற உருவகத்திற்கு மாறுதல் என்பது எதிர்பாராததாக உள்ளது. பலம் மற்றும் நிலைப்புத்தன்மை ஆகியவற்றிற்கு உருவகமாகக் கற்கள் பயன்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர், அவற்றைக் கிறிஸ்துவுக்கும் அவரது மக்களுக்கும் நடைமுறைப்படுத்தினார். இயேசு மூலைக்கல்லாக, புறக்கணிக்கப்பட்ட கல்லாக மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட கல்லாக இருக்கிறார். மற்றும் அவரது மக்கள் தேவனுடைய ஆலயத்தில் கற்களாக இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போன்று தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும்போது, அவரது பண்புகளில் பங்கேற்கின்றனர். ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில் அவர்கள் தேவனுடைய ஆலயத்தின் கட்டுமானத்தில் பயன்படுகின்றனர்.*

***வசனம் 4.** 1 பேதுரு நிருபத்தின் இப்பகுதி முழுவதிலும், பேச்சு உருவகங்கள் அடிக்கடி வருவதாகவும் வண்ணம் மிக்கவையாகவும் உள்ளன. மாம்சம் புல்லைப் போன்றதாக உள்ளது; மனிதனின் மகிமை அதன் மலரைப் போன்றதாக உள்ளது (1:24). புதிதாய்ப்பிறந்த குழந்தைகளின் எல்லா வாஞ்சையோடும் கிறிஸ்தவர்கள் பாலை விரும்ப வேண்டியவர்களாக உள்ளனர் (2:2). இயேசு, **மனுஷரால் தள்ளப்பட்டதாயுனும் … ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார்.**[4] பேதுருவின் வாசகர்களும் கர்த்தரைப் போன்றே "ஜீவனுள்ள கற்களாக" இருக்கின்றனர். அவர்கள் "ஆவிக்கேற்ற*

*மாளிகையாக" அல்லது வேறுவகையில் கருதுவதென்றால், அவர்கள் "பரிசுத்தஆசாரியக்கூட்டமாக" இருக்கின்றனர் (2:5). ஒவ்வொரு ஒப்புவமையும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைப் பற்றிய கூடுதல் முகப்பு ஒன்றை ஆழ்ந்து சிந்திக்கும்படி விசுவாசிகளுக்கு அறைகூவல் விடுக்கிறது. இதற்கு வண்ணம் சேர்க்கும் வகையில் பிந்திய வசனங்களில், கிறிஸ்தவர்கள் "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும்" மற்றும் "பரிசுத்த ஜாதியாயும்" உள்ளனர் என்று பேதுரு கூறினார் (2:9). அப்போஸ்தலரின் வாசகர்கள், தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற வகையில் தங்களுக்கும். தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் தொடர்ச்சி ஒன்றைக் காணக்கூடும்படிக்கு அப்போஸ்தலர் இந்தப் பேச்சு உருவகங்களைத் தேர்ந்தெடுத்தார்.*

*2:4க்கு முன்னதாக பேதுரு, சோதனையின் முகத்தில் கிறிஸ்தவ வாழ்வின் பரிசுத்தம் என்ற பாடக் கருத்தின் மீது கவனம் செலுத்தியிருந்தார், இப்போது அவர், சமூகம் என்ற வகையில் விசுவாசிகள் மீது மிகவும் வெளிப்படையாகத் தமது கவனத்தைத் திருப்பினார், மற்றும் கிறிஸ்தவத்தைச் சார்ந்துள்ள மக்களின் அறிக்கை மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அதை விவரித்தலை ஆழ்ந்து சிந்தித்தார்*

*கிறிஸ்தவர்கள் "ஜீவனுள்ள கல்லாகிய" இயேசுவினிடம் வந்தவர்கள் என்ற வகையில் விவரிக்கப் பட்டுள்ளனர். இயேசு "விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்" லாக இருக்கிறார் என்று பிந்திய வசனம் ஒன்றில் (2:6). பேதுரு கூடுதலாகக் கூறினார். இந்த ஒப்புவமையைக் கொண்டு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பதில் சற்று நிச்சயமற்றதன்மை உள்ளது. யோயாக்கீம் ஜெரேமியா அவர்கள், "மூலைக்கல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை அஸ்திபாரக்கல்லைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இந்த ஒப்புவமை, ஒரு கட்டிடத்தின் முக்கியமான கல் அல்லது உச்சக்கல்லைக் குறிக்க அதிக வாய்ப்புள்ளது என்று அவர் வாதிட்டார்.[5] பேதுரு தமது வாசகர்கள் இயேசுவை (1) அஸ்திபாரக்கல்லாக அல்லது (2) உச்சக்கல்லாக, எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தாலும், அது அந்த அப்போஸ்தலர் இவ்விடத்தில் ஏற்படுத்திய கருத்தில் சிறிதளவே மாற்றத்தை ஏற்படுத்தும். முக்கியமான கல் என்ற வகையில் இயேசு மனிதகுலத்திற்குத் தேவனுடைய கனிதரும் விளைவு யாவற்றையும் கொண்டுவந்திருக்கிறார் அல்லது அவர்மூலமாக விசுவாசத்தின் விளைவு நிறைவாக உணர்ந்தறியப்படுகிறது என்று விசுவாசிகள் புரிந்து கொள்வார்கள். இருப்பினும் ஜெரேமியாவின் கூற்று சரியானதுதானா என்பதில் சந்தேகம் உள்ளது. எபேசியர் 2:20ல் பவுல் "முலைக்கல்" என்ற இதே வார்த்தையைப் பயன்படுத்தினார், அங்கு சந்தர்ப்பப் பொருளானது, "அஸ்திபாரக்கல்" என்பதே அர்த்தமாக உள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. மற்றும் 1 பேதுரு 2:6ல் "மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்" என்பதே வார்த்தை அமைவாக உள்ளது. கல்லை வைத்தல் என்பது அஸ்திபாரக் கல்லையே குறிப்பிடுகிறது.*

*இயேசு அல்லது அவரைப் பின்பற்றுபவர்கள் "ஜீவனுள்ள கற்களாக" இருந்தனர் என்று கூறுதலானது, முதல் மனப்பதிவில் ஒரு*

முரண்தொடையாகத் தோன்றுகிறது. கற்கள் உயிரற்றவையாக உள்ளன. “உயிரற்ற கல்” என்பது “ஜீவனுள்ள கல்” என்பதைக் காட்டிலும் அதிகமாகப் புரிந்துகொள்ளப்படக் கூடிய ஒப்புவமையாக உள்ளது. இருந்தபோதிலும், பேதுரு “ஜீவனுள்ள கல்” என்ற ஒப்புவமையைத் தழுவிக்கொண்டார். அவரது வார்த்தைகள், கட்டுவோரால் புறக்கணிக்கப்பட்ட கல் என்ற, புதிய ஏற்பாட்டில் நன்கு பழக்கப்பட்ட ஒரு ஆய்வுக்கருத்திற்குத் திரும்பின (சங்கீதம் 118:22; மத்தேயு 21:42; மாற்கு 12:10; லூக்கா 20:17; நடபடிகள் 4:11). அப்போஸ்தலர் தமது வாசகர்கள், சபையின் வாழ்விற்கு இயேசு மூலைக்கல்லாக இருக்கிறார் என்பதை அறிய வேண்டும் என்று விரும்பினார். அவரே விசுவாசமும் நடக்கையும் அளக்கப்பட வேண்டிய தர அளவையாக உள்ளார். இயேசு அஸ்திபாரக்கல்லாக. மூலைக்கல்லாக இருக்கிறார் என்பது சிறிதளவே சிரமத்திற்குக் காரணமாகிறது, ஆனால் கர்த்தர் “ஜீவனுள்ள கல்லாக” இருக்கிறார் என்பது அழுத்தமான ஒப்புவமையாக உள்ளது. பேதுரு தட்டிக்கழிக்கவில்லை. வாழ்வு என்பது தேவனுடைய உள்ளான பண்பாக இருக்கையில், கிறிஸ்துவைப் பொறுத்த மட்டிலும்கூட அது அவ்வாறே உள்ளது (யோவான் 1:4). மரித்த இயேசுவை அல்ல, ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தரையே கிறிஸ்தவர்கள் தொழுதுகொள்கின்றனர். அவர் தமது சபையின் வாழ்வில் துடிப்பாக ஈடுபாடு கொண்டுள்ளார். அவரது மக்கள் அவரைத் தொழுதுகொள்ளும்போது, அவர் அதைக் கேட்டு செயல்படுகிறார். இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் வாழ்கிறார்; அங்கிருந்து அவர் திரும்பவும் வருவார், அப்போது நம்பிக்கை உணர்ந்து அறியப்படும். இயேசு வாழ்கிறார்; இயேசு ஒரு கல்லாக இருக்கிறார். ஒவ்வொரு ஒப்புவமையும் கிறிஸ்தவர்கள் தாங்கள் தொழுதுகொள்ளும் கர்த்தரைப் பற்றிப் புரிந்துகொள்ளுதலில் வளர உதவுகிறது.

**அவரிடத்தில் சேர்ந்தவர்கள்** என்ற அளவின் அடிப்படையில் கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைக் கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். பேதுரு பயன்படுத்திய “சேர்ந்த” *(proserchomai),* என்ற அதே வினைச்சொல், எபிரெயர் 4:16ல் “அண்டையிலே சேரக்கடவோம்” என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: “ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.” தேவனிடத்தில் சேருவதற்குத் தேவனால் அழைக்கப்படுதலை இலேசாக எடுத்துக்கொள்ளல் ஆகாது. தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னத்தில் இருத்தல் என்பது பயபக்திமிக்க செயலாக உள்ளது. ஆலயத்தில் தேவனை ஏசாயா கண்டபோது, பயம் அவரை [ஏசாயாவை] மேற்கொண்டது. “ஐயோ! அதமானேன், … சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே” (ஏசாயா 6:5). ஏனெனில் ஆரோனுடைய மகன்களிடம் கண்டறியப்பட்டபடி, ஒரு ஆசாரியரும்கூட பயபக்தியற்ற நிலையில் கிட்டிச் சேருதல் என்பது இடர்ப்பாடுள்ள விஷயமாக இருந்தது (லேவியராகமம் 10:1, 2). ஜெபத்திற்காகவோ அல்லது ஆராதனைக்காகவோ, தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது ஒருக்காலும் சிறிய விஷயமாக இருப்பதில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் அவரிடத்திற்குத் தைரியத்துடன் வருகின்றனர். கிறிஸ்தவர்கள் சேவிக்கும் மீட்பர், மனித மாம்சத்தில் வந்து மனிதரின் பாவத்திற்காக மரித்தார்; அவர் இரக்கமுள்ளவர்

*என்பதை அவர்கள் ருசி பார்த்துள்ளனர். ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது அச்சம் நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் மத்தியஸ்தரான கிறிஸ்துவுடன் ஒரு விசுவாசி எப்போதும் "அவரிடத்தில் கிட்டி சேரலாம்."*

*மனிதர் தேவனிடத்தில் கிட்டிச்சேர உதவியாக உள்ள "ஜீவனுள்ள கல்" என்பது "மனுஷரால் தள்ளப்பட்டதா" யிருந்தது என்பது முரண்பாடாக உள்ளது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). இயேசு, கட்டுவோரால் தள்ளப்பட்ட கல்லாக இருந்தார் என்று அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபோது, அவர் கர்த்தருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றினார் ஆனால் தேவன் அவரை தமது வீட்டின் மூலைக்கல்லாகத் தேர்ந்து கொண்டிருந்தார் (லூக்கா 20:17). இயேசு,* ***தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற*** *ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார் என்பது, அவர் மனிதரால் ஏற்றுக்கொள்ளப்பட்டாரா அல்லது தள்ளப்பட்டாரா என்பதைக் காட்டிலும் அதிகம் முக்கியமானதாக உள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகளில்* "chosen and precious" *என்றுள்ளது* (NRSV; *காண்க* KJV; NIV). *"தெரிந்துகொள்ளப்பட்டது" என்ற வார்த்தையை ஏற்கனவே அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்குப் பயன்படுத்தியிருந்தார் (1:2). இயேசு தேர்ந்துகொள்ளப் பட்டவராகவும் விலையேறப்பெற்றவராகவும் இருந்தபோதிலும் மனிதரால் தள்ளப்பட்டார், பேதுருவின் வாசகர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகவும் அவருக்கு விலையேறப் பெற்றவர்களாகவும் இருந்தாலும் அவர்கள் மனிதரால் தரப்பட்ட உபத்திரவங்களைச் சகித்துக் கொண்டு இருந்தனர் என்பதே இங்கு மறைகருத்தாக உள்ளது. அவர்களின் பாடுகளும் சோதனைகளும் தேவன் அவர்களைக் கைவிட்டிருந்தார் என்பதற்கு அடையாளங்களாக இருக்கவில்லை. அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக்கொண்டிருந்தனர் (2:21).*

***வசனம் 5. ஆவிக்கேற்ற மாளிகை*** *என்ற வார்த்தைகளைப் பேதுரு பயன்படுத்தியபோது, தமது வாசகர்கள் எருசலேமின் தேவாலயத்தை நினைக்க வேண்டும் என்று விரும்பினாரா என்பதில் கொஞ்சம் சந்தேகம் உள்ளது. பழைய ஏற்பாட்டில் "மாளிகை" (வீடு) என்பது தேவாலயத்திற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும்.*[6] *யூதர்களின் சமூகத்திற்கும் அவர்களின் தேசீய இருப்பிற்குமான குவிய இடம் என்ற வகையில் தேவாலயத்துடனான உறவை முறித்துக் கொள்ளுதல் என்பது யூதர்களுக்குக் கடினமான விஷயமாயிருந்தது (நடபடிகள் 6:13, 14). தேவன் தேர்ந்துகொண்ட மக்களுடனான அவரது உறவின் மிகக்குறிப்பிடத்தக்க காரணியான தேவாலயம் இயேசுவின் உடலினால் இடமாற்றப்படும் என்று அவரே குறிப்பிட்டிருந்தார் (யோவான் 2:19-21). தேவாலயம் என்பது, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஒரு நிறுவனமாகவும் யூதர்களின் தேசீய வாழ்வாகவும் இருந்தது. அந்தக் கருத்தைக் கிறிஸ்தவர்கள் ஏன் கைவிடக்கூடாது? கிறிஸ்தவர்கள் யார் என்பதைப் பற்றிய முக்கிய விஷயங்களை அவர்களுக்குத் தேவாலயம் போதிக்க முடியும் என்பதே பேதுருவைப் பொறுத்தமட்டில் இதற்குப் பதிலாக இருந்தது. இயேசு "ஜீவனுள்ள கல்லாக" இருக்கிறார் என்று*

கூறிய நிலையில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்கள் "ஆவிக்கேற்ற மாளிகையாக ... கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று கூறுவதன் மூலம் கட்டிட ஒப்புவமையைத் தொடர்ந்து எடுத்துரைத்தார்.

தேவனுடைய ஆலயம் என்ற கருத்து, புதிய ஏற்பாடு ஒப்புவிக்க மறுக்கும் பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் தேவாலயம் என்பது, தேவன் தமது நாமத்தை வைத்து தமது பிரசன்னத்தை அறியச்செய்த இடமாக இருந்தது போன்று, புதிய ஏற்பாட்டிலும் ஒரு தேவாலயம் என்பது தேவன் வாசம்செய்யும் இடமாக உள்ளது. தேவாலயம் என்பது தொடர்ந்து இருக்கலாயிற்று. தேவாலயக் கட்டிடத்தில் கற்கள் மாட்சிமையானவையாக இருந்தன (மாற்கு 13:1), புதிய தேவாலயத்தில் **ஜீவனுள்ள கற்களாக** இருத்தல் என்பது எல்லையற்ற வகையில் அதிகம் விலையேறப் பெற்றவையாக உள்ளது. தேவனுடைய மாளிகையின் கற்கள், பொன்னினாலும் விலையேறப்பெற்ற ஆபரணங்களினாலும் ஜொலிப்பதற்கு மாறாக விசுவாசத்தினாலும் கிறிஸ்தவ வாழ்வின் நற்தன்மையினாலும் அழகூட்டப்படுகின்றன. சபையானது, நன்கு கட்டப்பட்ட மாளிகை போன்று தேவன் வாசம் பண்ணும் ஆலயமாக உள்ளன என்பது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்த விரும்பிய ஒப்புவமைகளில் ஒன்றாக இருந்தது (1 கொரிந்தியர் 3:16, 17; எபேசியர் 2:21; எபிரெயர் 3:6).

பேதுரு தமது நிருபங்கள் இரண்டிலும் எவ்விடத்திலும் "சபை" என்ற வார்த்தையை ஒருக்காலும் பயன்படுத்தவில்லை என்பது ஆர்வத்திற்குரிய/ கவனிக்கத்தக்க விஷயமாக உள்ளது. அதே வேளையில் இந்த அப்போஸ்தலர், கிறிஸ்தவ வாழ்வின் சமூக இயல்பைப் பற்றி மிகத்துல்லியமாக அறிந்திருந்தார். 5ம் வசனத்தில் அவர், கிறிஸ்தவர்களை ஒட்டுமொத்தமாக "ஆவிக்குரிய மாளிகை" என்று கூறியதன்மூலம் அவர், கிறிஸ்தவத்தின் சக சார்ந்திருத்தலைக் குறிப்பிட்டார். 5:2ல் அவர்களை அவர் "தேவனுடைய மந்தை" என்று அழைத்தார். கர்த்தருடைய சபையை "ஆவிக்கேற்ற மாளிகை" என்று பேதுரு அழைத்தபோது அவர் சபையைப் பற்றிக் கூற மனவிருப்பம் கொண்டிருந்து என்ன என்பது முற்றிலும் தெளிவாகத் தெரிவதில்லை. "ஆவிக்குரிய" என்பது புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாத்தியமான அர்த்தங்களில் பின்வருபவை உள்ளடங்குகின்றன: (1) சபை உலகப்பிரகாரமான பொருள்களினால் அமைக்கப்படுவதில்லை என்ற காரணத்தினால் அது "ஆவிக்குரிய மாளிகையாக" உள்ளது. "ஆவிக்கேற்ற பலிகள்" (மேலும் 2:5), "ஞானக்கன்மலை" (1 கொரிந்தியர் 10:4), மற்றும் "ஆவிக்குரிய சரீரம்" (1 கொரிந்தியர் 15:44) ஆகிய இடங்களில் இவ்வார்த்தையின் அர்த்தம் அதுவாகவே காணப்படுகிறது. (2) கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்று பவுல் உறுதிப்படுத்தினார் (ரோமர் 8:14-16). சபையில் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருப்பதால் அது "ஆவிக்கேற்ற மாளிகையாக" இருக்கலாம். (3) சபையைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார் என்பதால், அது "ஆவிக்கேற்ற மாளிகையாக" உள்ளது என்பது இங்கு சிந்தனையாக இருக்கலாம். நியாயப்பிரமாணம் (ரோமர் 7:14) அல்லது வரங்கள் (1 கொரிந்தியர் 12:1) ஆவிக்குரியவைகளாக இருந்தது போன்று, இது (சபை) ஆவிக்குரியதாக உள்ளது - ஏனெனில் தேவன் சித்தம் கொண்டதை நிறைவேற்ற அவைகள்

ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்தன. இவற்றில் மூன்றாவது சாத்தியக்கூறு மிகச்சிறந்த ஒன்றாக உள்ளது. சபையினுள்ளும் சபையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார் என்பதால், தேவனுடைய மக்கள் ஜீவனுள்ள கற்களால் ஏறப்படுத்தப்பட்ட "ஆவிக்கேற்ற மாளிகையாக" உள்ளனர்.

"ஆவிக்குரிய" என்ற வார்த்தையைப் பற்றி ஒருவர் புரிந்து கொள்வது எது என்பது, **கட்டப்பட்டுவருகிறீர்கள்** என்ற வினைச்சொல் பற்றிய அவரது விளக்கத்தின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தும். இது "நீங்கள் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்ற ஒரு சாதாரண கூற்றாக இருக்கலாம் அல்லது "நீங்களே கட்டப்படுங்கள்" என்ற ஒரு கட்டளையாக இருக்கலாம். இந்த இடத்தில் கிரேக்க மொழியில், குறிப்புரைத்தல் அல்லது கட்டளையிடுதல் ஆகியவற்றின் வினைச்சொற்களுக்கு இடையில் வித்தியாசம் எதுவும் ஏற்படுத்தப்படுவதில்லை. NRSV வேதாகமம் வினைச்சொல்லை கட்டளையாக எடுத்துக் கொள்கிறது, அதே வேளையில் NASB வேதாகமம் இதை குறிப்புரைத்தலாக எடுத்துக்கொள்கிறது. NASB வேதாகமம் சிறப்பான விஷயத்தைக் கொண்டுள்ளது. விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய வாழ்வில் பங்கேற்கும்போது, தேவனுடைய மகிமைக்காக "ஆவிக்குரிய மாளிகையாக" அவர்களைக் கட்டி எழுப்புவதற்குப் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மத்தியில் செயல்படுகிறார்.

பல்வண்ணக் காட்சி காட்டும் கருவி ஒன்றைப் போல், பேதுரு தமது உருவகங்களைக் கற்களில் இருந்து தேவாலயத்திற்கும், பலிகளைச் செலுத்தும் ஆசாரியர்களுக்கும், பலிகளுக்கும்கூட மாற்றினார். விசுவாசிகள் கற்களாக, தேவாலயமாக மற்றும் **பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக** உள்ளனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆசாரியர்கள், மக்களுக்கும் தேவனுக்கும் இடையில் நின்றனர். ஆசாரியர்கள் மாத்திரமே பலிசெலுத்த முடிந்தது. இஸ்ரவேலின் முதல் அரசரான சவுல், தாம் ஆசாரியராக இராதிருந்தும் பலிகளைச் செலுத்தியதால் தேவனுக்குப் பிரியமற்றுப்போனார் (1 சாமுவேல் 13:8-14). இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் ஆசாரியர்களாக இருக்கவில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களாக உள்ளனர். எல்லா விசுவாசிகளுக்குமான ஆசாரியத்துவம் என்பது சீர்படுத்துதலுக்கு மாபெரும் கூவுதல்களில் ஒன்றாக உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 1:6), ஆயினும் இந்தக் கருத்து நியாயப்பிரமாணத்தில் அறியப்படாமலிருக்கவில்லை (யாத்திராகமம் 19:6; காண்க ஏசாயா 61:6). இஸ்ரவேல் மக்கள் சார்பில் காணிக்கை செலுத்துவதற்குத் தேவனுடைய சமூகத்தில் செல்லும் சிலாக்கியம் பெற்றிருந்த ஆரோனின் குமாரர்கள் போன்று, கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த காணிக்கைகளைச் செலுத்துவதற்குக் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் தைரியமாக வரமுடியும். தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல. அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது சுய உரிமையில் ஆசாரியராக இருப்பதால், அவர்கள் ஒவ்வொருவரும் அவரிடத்தில் சென்று சேர முடியும்.

விசுவாசிகள் "ஆவிக்குரிய மாளிகை" க்குள் கட்டியெழுப்பப்படுவது போன்றே, **அவர்கள் இயேசுகிறிஸ்து மூலமாகத் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தவும் வேண்டும்.** "பலி" என்பதற்கான கிரேக்க மற்றும் எபிரெய வார்த்தைகள் இரண்டுமே இரத்த பலிசெலுத்துதலைக்

*குறிக்கின்றன. பலி என்பது கொல்லப்பட்ட மிருகமாக இருந்தது, ஆனால் இவ்வார்த்தை தேவனுக்குச் செலுத்தப்படும் மற்ற விஷயங்களையும் உருவகமாகக் குறிப்பிடப்பயன்பட்டிருக்க வாய்ப்புள்ளது. சங்கீதக்காரர் "நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு" (சங்கீதம் 50:14); "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்" (சங்கீதம் 51:16) என்று எழுதினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்று எழுதியபோது, இரத்தப்பலியைத் தமது சிந்தையில் கொண்டிருக்க வில்லை என்பது தெளிவு (எபிரெயர் 13:15).*

*வேதாகமம் கிரேக்கு மற்றும் எபிரெயு ஆகிய மொழிகளில் இருந்து இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட போது, இலத்தீன் மொழிபெயர்ப்பில் "பரிசுத்த கொடை," "தேவனுக்குச் செலுத்தப்படும் கொடை" என்று அர்த்தப்படும் sacrificium, என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. "இரத்தப்பலி" என்று அர்த்தப்படும் ஆங்கில வார்த்தை இல்லாத நிலையில், ஆங்கில மொழிபெயர்ப்புகள் இலத்தீன் மொழியில் இருந்து கடன்பெற்ற* "sacrifice" *என்ற வார்த்தையைக் கொண்டு இங்கு அர்த்தத்தைத் தரவழைத்தன. அது ஒரு மோசமான தெரிவாக இருப்பதில்லை.* Sacrifice*s* *என்பவை உண்மையில் தேவனுடைய மக்கள் அவருக்குக் கொடுக்கக் கொண்டு வந்த கொடைகளாக இருந்தன. பிரபலமான பயன்பாட்டில்* "sacrifice" *என்பதன் அர்த்தம் அசைக்கப்பட்டது என்பது துரதிர்ஷ்டவசமானது. "தேவனுக்கு ஒரு பரிசு கொடுத்தல்" என்பதே இதன் அர்த்தமாக உள்ளது, ஆனால் பெரும்பான்மையான நவீனகால மக்களுக்கு* "sacrifice" *என்பது "ஒருவர் சிலவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தல்" என்றே அர்த்தப்படுகிறது.* sacrifice *என்பது ஆராதிப்பவர் தமக்குத்தாமே மறுத்துக் கொள்ளுதல் என்பதன் மீது கவனம் குவிப்பதாக இருக்கக் கூடாது, மாறாக கொடுத்தல் மூலம் அவர் வெளிப்படுத்த விரும்பும் அவரது விருப்பத்தின் மீதே கவனம் குவிப்பதாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனுக்கென்று எதையும் கொடுக்க விருப்பமாயிருத்தல் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். தேவனுக்குக் கொடுப்பதற்குத் தேவன் நம்மை அனுமதிக்கிறார், ஏனெனில் கொடுத்தல் என்பது அன்பு தன்னையே வெளிப்படுத்தும் நிகழ்வில் உள்ளாகப் பொதிந்துள்ளது.*

***வசனம் 6.*** *அப்போஸ்தலர் தமது நிருபத்தின் வசனங்கள் 4 மற்றும் 5 ஆகியவற்றில் தாம் உறுதிப்படுத்தியவற்றை, பழைய ஏற்பாடாகிய* **வேதம்** *பற்றிய குறிப்பு மறுவலிவூட்டும் என்று நினைத்தார். இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வெளிப்பாட்டில், நசரேயனாகிய இயேசுவைக் கிறிஸ்தவர்கள் கண்டனர். பேதுரு, வசனங்களின் குழு ஒன்றை அளித்தார்: ஏசாயா 28:16; சங்கீதம் 118:22; ஏசாயா 8:14. இவ்வசனப் பகுதிகளின் பொதுவான ஆய்வுக்கருத்து, பழைய ஏற்பாட்டில் இவற்றின் காட்சி அமைவிலோ அல்லது இவைகள் போதிப்பவற்றிலோ இருப்பதில்லை. மாறாக அது [பொதுவான ஆய்வுக்கருத்து], இவைகள் "கல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் வகையில் இருக்கிறது. முதல் வசனப்பகுதியான ஏசாயா 28:16,* LXX, *(செப்துவஜிந்த்) வேதாகமத்தின் மிகச்சரியான குறிப்பல்ல, ஆனால் அதே வார்த்தைகள் பலவற்றை இது கொண்டுள்ளது. இவ்வசனத்தின் கடைசிச்*

*சொற்றொடரான "விசுவாசிக்கிறவன் ..." என்பது LXX வேதாகமத்தில் இருந்து வந்துள்ள வார்த்தையாக உள்ளது. இதே வசனப்பகுதியை ரோமர் 9:33ல் பவுல் குறிப்பிட்டார், அங்கு அவர் இதை ஏசாயா 8:14 உடன் ஒன்றிணைத்தார். இயேசு யூதர்களால் வெறுக்கப்பட்டிருந்தார் என்பதே இந்தக் குறிப்பைக் கொண்டு பவுல் ஏற்படுத்திய கருத்தாகும்.*

*சந்தர்ப்பப் பொருளில் ஏசாயா 28:16ஐ ஆய்வு செய்யும் வாசகர், அந்தத் தீர்க்கதரிசி "ஆகையால் எருசலேமிலுள்ள இந்த ஜனத்தை ஆளுகிற" வர்களைப் பற்றி எழுதியிருந்தார் என்பதை விரைவில் காண்பார்கள் (ஏசாயா 28:14). அவர் இஸ்ரவேலின் மார்க்கத் தலைவர்களைப் பற்றிப் பேசினார். தீர்க்கதரிசி மூலமாகத் தேவன், அப்போதய ஆட்சியாளர்களுக்கு நேரெதிராக இருக்கும் இன்னொரு ஆட்சியாளரைத் தரப்போவதாக வாக்களித்தார், அவர் "நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக" வைப்பார் (ஏசாயா 28:17). இதை எழுதிய போது ஏசாயா இயேசுவைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? இதை அறிய வழியெதுவும் இல்லை, ஆனால் ஏவுதல் பெற்றிருந்த அப்போஸ்தலரான பேதுருவும் இந்தத் தீர்க்கதரிசியும், தேவன்* **சீயோனில்** *வைத்த* **விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்** *உண்மையில் இயேசுவே என்பதில் மனநிறைவு கொண்டிருந்தனர். மூலைக்கல் என்ற வகையில் இயேசு, தேவன் தமது மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினாரோ அவை யாவற்றிற்கும் அளவுகோல் ஆனார். கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு ஜீவனுள்ள கல்லாகிய கிறிஸ்தவர்கள் யாவரும், அந்த மூலைக்கல் லுடன் தாங்கள் கொண்டுள்ள உறவின் மூலமாகத் தேவனுடனும் தங்கள் சகவிசுவாசிகளுடனும் தங்கள் உறவைத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றனர். அதே வேளையில் பேதுரு, ஏசாயா 28:16ஐக் குறிப்பிடுவதன் மூலமாக, மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலுக்கும் ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கும் இடையிலான தொடர்பை விவரித்து, தேவன் கிறிஸ்துவுக்குள் அடிப்படையில் புதிதான சிலவற்றைச் செய்துள்ளார் என்பதைச் செயல்விளக்கப்படுத்தினார். ஏர்னெஸ்ட் பெஸ்ட் அவர்கள், கிறிஸ்துவுக்குள் "தேவன் புதிதான சிலவற்றைச் சிருஷ்டித்தார், அது மனிதகுலத்தின் மீட்பு ஆகும்" என்று எழுதினார்.[7]*

*"சீயோன்" என்பதைப் பற்றித் தக்க வகையில் பேசுவதென்றால், அது தேவாலயம் அமைந்திருந்த மலையுச்சியின் தெற்குப்பகுதியில் இருந்து வெளியே நீண்டிருந்த, தாவீதின் நகரமாகும் (2 சாமுவேல் 5:7). காலங்களினுடே, சாட்சியத்தினால், இந்தப் பெயர் எருசலேம் முழுவதற்கும் வழங்கப்பட்டு வந்தது (சங்கீதம் 102:21), பின்பு இது குறிப்பாகத் தேவாலயம் அமைந்தி ருந்த மலைக்கும் வழங்கப்பட வந்தது (ஏசாயா 8:18; மீகா 4:7). இயேசுவும் அவரில் விசுவாசம் கொள்பவர்களும் "ஆவிக்கேற்ற மாளிகையில்" "ஜீவனுள்ள கற்களாக" இருக்கின்றனர் என்று அப்போதுதான் பேதுரு உறுதிப்படுத்தி இருந்திருத்ததால், இவ்வசனத்தில் "சீயோன்" என்பது தேவாலய மலைக்கான குறிப்பாக இருக்க வாய்ப்பு உள்ளது.*

*"சீயோனில்" வைக்கப்பட்ட* **தெரிந்துகொள்ளப்பட்ட கல்லான** *இயேசுவைப் பொறுத்தமட்டில்,* **அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை** *என்று பேதுரு கூறினார். அவர் ou mē என்ற பலமான அழுத்தமான எதிர்மறைச் சொல்லைப் பயன்படுத்தினார். அவர்மீதுள்ள விசுவாசத்தின் விளைவாக வெட்கப்படுதல் ஏற்படச்*

*சாத்தியக்கூறு எதுவுமே இருப்பதில்லை.* NASB *வேதாகமத்தில்* "disappointed" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள kataischunō, என்ற கிரேக்கச் சொல் பொதுவாக (தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்று) "வெட்கப்படுவதில்லை" என்று தரவழைக்கப்படுகிறது.* NIV *வேதாகமத்தில்* "will never be put to shame" *என்றுள்ளது. ஒருவர் தமது விசுவாசத்தைக் கிறிஸ்துவின்மீது வைக்கும்போது, சிறுமைப்படுதல் மற்றும் வெட்கப்படுதல் ஆகியவை ஏற்படச் சந்தர்ப்பமே ஏற்படுவது இல்லை. கிரேக்க - ரோமானிய உலகத்தில், "வெட்கம்" என்பது இதற்கான ஆங்கில வார்த்தை தெரிவிக்கும் கருத்தைக் காட்டிலும் அதிகமான சமூக உள்ளடக்கக் கருத்தைக் கொண்டிருந்தது. தற்கால ஆங்கிலத்தில் வெட்கம் என்பது பெரும்பாலும் உள்ளான, உளவியல் சார்ந்த உணர்வாக உள்ளது. பேதுரு வாழ்ந்திருந்த கிரேக்க உலகத்தில் இருந்தவர்கள், வெட்கம் என்பதை, ஒருவர் தமது சமகாலத்தவர்களின் அல்லது ஒருவேளை தேவனின் முன்பாக அவமானமாக உணருதலின் வகையில் நினைத்திருப்பார்கள்.*

***வசனம் 7.*** NASB *வேதாகமத்தில்* **this precious value, then, is for you who believe,** [*"மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன்"*] *என்றுள்ள இடத்தில்* "Therefore the honor is to you believers" *என்பதே இன்னும் சிறப்பான மொழிபெயர்ப்பாக இருக்கும் என்று பல விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர். அந்தத் தரவழைப்பு இலக்கணத்திற்கு மிகச்சரியாகப் பொருந்துவது மட்டுமின்றி, அது 2:6ன் முடிவில் உள்ள "வெட்கம்" என்பதற்கு நேர்த்தியான எதிர்மறையையும் அளிக்கிறது. இந்த மொழிபெயர்ப்பின் சார்பாக வாதாடியவர்களில் ஃபிரான்சீஸ் ரைட் பியர் அவர்களும் இருந்தார். அவர், "விசுவாசிகளுக்குத் தரப்படும் கீர்த்தியானது, தேவன் கிறிஸ்துவுக்குத் தந்த கீர்த்தியாகவே உள்ளது, அவருடன் [கிறிஸ்துவுடன்] அவர்கள் ஆவிக்கேற்ற மாளிகையின் கட்டுமானத்தில் ஒன்றிணைக்கப் பட்டுள்ளனர்" என்று எழுதினார்.[8] பியர் அவர்கள் இந்தச் சொற்றொடரைப் புரிந்து கொண்டிருந்த விதத்தில் இருந்து வேறுபட்ட வகையில் இதை* NASB *வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் புரிந்துகொண்டிருந்தனர். அவர்கள், கிறிஸ்தவர்களுக்கு இயல்பாகச் சேரும் "விலையேறப்பெற்ற" என்பது சீயோனின் விலையேறப்பெற்ற கல்லாகத் தேவன் அவர்களை வைத்தமையே என்று புரிந்துகொண்டனர்.*

*சங்கீதம் 118:22* (LXX *ல் 117:22) ஐச் சுட்டிக்காண்பித்தல் என்பது* ***கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கு*** *ஏற்படும் விளைவை விவரிக்கிறது. மத்தேயு 21:42ல் இயேசு, சங்கீதத்தைக் குறிப்பிட்டார், மற்றும் அதை பேதுரு, நடபடிகள் 4:11ல் குறிப்பிட்டார். இவ்விரு இடங்களிலும், கட்டுவோர்களாக இருந்த யூதத் தலைமைத்துவம் இயேசுவைப் புறக்கணித்தனர் என்பதே விஷயமாக இருந்தது, இங்கு பேதுரு ஏற்படுத்திய கருத்து, இயேசு ஏற்படுத்திய அல்லது அவர்* [*பேதுரு*] *நடபடிகள் 4:11ல் ஏற்படுத்திய கருத்தில் இருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கவில்லை.* ***கல்லாகிய கிறிஸ்துவைப் புறக்கணித்த*** *யூதத்தலைமைத்துவமே இன்னும்* ***கட்டுவோர்களாக*** *இருந்தது. விஷயம் அப்படி இருந்த போதிலும், பெருமளவில் புறஜாதியாரின் உலகத்திற்கு முன்னால், தள்ளப்பட்ட கல்லையே தேவன்* ***மூலைக்கல்லாக்கினார்*** *என்று பேதுரு அறிவித்தார். "பிரதான மூலைக்கல்" என்பதே இந்தக் கிரேக்கச் சொற்றொடரின் மிகநேரடியான அர்த்தமாக உள்ளது* (KJV; ASV).

*“பிரதான மூலைக்கல்” என்பது தன்னில்தானே ஒரு முக்கிய கல்லைக் குறிப்பிட்டாலும் 2:6ல் குறிப்பிடும் சீயோனில் வைக்கப்பட்ட மூலைக்கல் என்பதிலிருந்து பிரதான மூலைக்கல் வித்தியாசமாக அர்த்தப்பட அவசியமற்றதாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பப் பொருளில், இந்த வசனத்தில் முன்பு (2:6) “மூலைக்கல்” மற்றும் பிறகு (2:7) “இடறுதற்கேதுவான கல்” என்பன, “பிரதான மூலைக்கல்” என்பதும் “மூலைக்கல்” என்பதும் ஏகார்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. ஒரு கல் கட்டுமான உயரத்தில் ஒரு பிரதான கல்லில் இடறிவிழுதல் என்பது ஒருவருக்கு சிரமமானதாக இருக்கும். தேவன் இயேசுவை “மூலைக்கல்ல” ாக்கினார் என்பது விசுவாசியாதவர்களுக்கு ஒரு சாட்சியாயிருக்கிறது. தேவன் இயேசுவின் வாழ்விலும் தம்முடைய ஜனங்களின் வாழ்விலும் கிரியை செய்து கொண்டிருந்தார் என்று அது அறிவித்தது.*

***வசனம் 8.*** தமிழ் [வேதாகமத்தில்] *7ம் வசனத்தின் கடைசிப்பகுதியாக உள்ள* **இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று** *என்பது, எபிரெய மொழியில் இருந்து கிரக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தில் ஏசாயா 8:14ன் தளர்வான தரவமைப்பாக உள்ளது. ஏசாயா தீர்க்கதரிசி மூலமாகப் பேசிய தேவன், தாம் பரிசுத்தமானவரும் அஞ்சப்படத் தக்கவருமாக இருப்பதாக உறுதிப்படுத்தினார். சூழ்ச்சிகளை வடிவமைப்பவர்கள் அஞ்சப்படத் தக்கவர்கள் அல்ல. தேவன் மீது நம்பிக்கையாக இருப்பவர்களுக்கு அவர் புகலிடமாக இருக்கிறார், ஆனால் யூதாவிலும் இஸ்ரவேலிலும் இருந்தவர்களுக்கு அவர் இடறுதற்கேதுவான கல்லாக ஆனார். ஏசாயாவின் இந்த வார்த்தைகள் பேதுருவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பொருத்தமாக இருப்பதைப் பேதுரு கண்டார். தேவன் இயேசுவை மூலைக்குத் தலைக்கல்லாக்கியது மட்டுமின்றி, விசுவாசியாதவர்களைக் குற்றப்படுத்துகிற, அவர்கள் இடறிவிழுவதற்கு ஏதுவானவராகவும் ஆக்கினார். மக்களின் இருவகையினர் மாத்திரமே இருப்பதாகப் பேதுரு நினைத்தார். இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் மற்றும் இடறுபவர்கள் மற்றும் விசுவாசியாமல் இருப்பவர்கள்.*

*8ம் வசனத்தின் நிறைவுப்பகுதி கடினமானதாக உள்ளது. நேர்ப்பொருளில் இது,* “Unto which also they were placed.” *(அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்) என்று வாசிக்கப்படுகிறது. சீர்திருத்த இறையியலாளர்கள், இவ்வசனத்தில் தனித்தனி நபருக்குரிய முன்குறிப்பிட்ட அடைவிடத்தைக் காண்பதற்கு விரைந்திருக்கின்றனர். பேதுரு எழுதிய நிருபம் முழுவதிலும் அவர் தமது வாசகர்களைக் கீழ்ப்படியவும், பாவத்தில் இருந்து மனந்திரும்பவும், தெளிவான சிந்தையைக் காத்துகொள்ளவும், ஊக்கமாய் நம்பியிருக்கவும் மற்றும் இதுபோன்ற பிற விஷயங்களைச் செய்யவும் அழைத்திருக்கிறார். என்பதே இந்த விதமான விளக்கவுரைக்குப் பிரச்சனையாக இருக்கிறது காலம் கடந்த நித்தியத்தில் தேவனுடைய இராஜரீக ஆளுகையின் செயல்பாடு ஒன்றினால், நித்திய வாழ்விற்கோ அல்லது நித்திய அழிவிற்கோ பேதுருவின் வாசகர்கள் தனித்தனியே நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றால், அப்போஸ்தலருடைய புத்திமதிகள் ஏளனத்தின் ஒலியாக இருந்திருக்கும். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே அவர் தீர்மானித்துள்ள நிலையில்,*

*அவற்றைச் செய்யுமாறு மக்களை அழைத்தல் என்பது எந்தக் கருத்தறிவையும் ஏற்படுத்தாது. NASB வேதாகமம் "இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்"* **[to this doom they were also appointed]** *என்ற சொற்றொடரில் உள்ள* "doom" *என்ற வார்த்தையைச் சாய்வெழுத்துக்களில் குறிப்பிடுகிறது. சாய்வெழுத்துக்களில் ஒரு வார்த்தை வரும்போது அது மொழிபெயர்ப்பாளர்களால் அங்கு தரப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*தேவன் தமது குமாரனை மீட்பராக அனுப்பியபோது கூட, சிலர்* ***இடறுவார்கள்*** *மற்றும்* ***கீழ்ப்படியாமல் இருப்பார்கள்*** *என்று அவர் முன்னறிந்தார் என்பது பேதுருவின் அர்த்தமாக உள்ளது. சிலர் இடறுவார்கள் என்பது பேதுருவின் வாசகர்களுக்குத் திகைப்படையும் வேளையாக இருந்திருக்காது. கீழ்ப்படியாமைக்கென்றே முன்குறிக்கப்பட்டிருந்த சிலர் என்ற வகையில் தனிநபர்களைப் பற்றிப் பேதுரு தமது சிந்தையில் கருத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர், சிலர் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வார்கள் மற்றும் சிலர் இடறுவார்கள் என்ற முழுமையான விழிப்புணர்வுடன் மனித மீட்பிற்கான தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தினார்.*

## *இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் (2:9, 10)*

***9நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 10முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.***

*சபை மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஆகியோருக்கு இடையில் உள்ள தொடர்ச்சியானது பேதுருவின் சிந்தையில் இருந்து ஒருக்காலும் தூரத்தில் இருக்கவில்லை. தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டு எகிப்தில் இருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களினத்துடன் கிறிஸ்தவர்களைச் சமானப்படுத்துதலுக்கு அப்பால் அப்போஸ்தலர் சென்றார். கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததிக்குள் பங்கேற்றிருத்தல் என்பதாகும், ஆனால் இது ஆரோனின் ஆசாரியத்துவத்தில் பங்கேற்றலாகவும் உள்ளது. ஒரு மக்களினம் என்ற வகையில் இஸ்ரவேலின் பரிசுத்த தன்மை அடிக்கடி மிகமோசமாகப் பிழைபட்டது. கிறிஸ்துவின் ஊழியமோ அவை எல்லாவற்றையும் மாற்றிப்போட்டது. மக்களாக இல்லாதிருந்து இப்போது மக்களாக இருப்பவர்கள் தேவனுடைய மக்களாகி இருக்கின்றனர்.*

***வசனம் 9.*** *இவ்வாக்கியத்தின் தொடக்கத்தில் வலிவான* ***நீங்களோ*** *என்பது உள்ளது. கீழ்ப்படியாதவர்கள் கிறிஸ்துவின் மீது இடறினார்கள் என்று*

கூறியபின்பு உடனே பேதுரு, “நீங்களோ” [ஆங்கில வேதாகமத்தில் இது “But you,” என்றுள்ளது], மற்றும் அவர்கள் முற்றிலும் வேறுபட்டிருந்தனர் என்று அவர்களுக்குக் கூறினார். NASB, வேதாகமத்தில் உள்ளபடி, கிறிஸ்தவர்களைப் பற்றி நான்கு ஒப்புவமைகளை அப்போஸ்தலர் பயன்படுத்தினார். இந்தப் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் பண்புத் தொகை ஒன்றைக் கொண்டுள்ளது: **சந்ததி தெரிந்துகொள்ளப்பட்டதாக உள்ளது, ஆசாரியக்கூட்டம் ராஜரீகமானதாக உள்ளது, ஜாதி** [மக்களினம்] **பரிசுத்தமானதாக உள்ளது, மற்றும் ஜனங்கள் தேவனுக்குச் சொந்தமான ஜனமாக** உள்ளனர். ஒரு யூதக்கிறிஸ்தவர் தமது சிந்தித்தலை கணிசமாக மாற்றும்படி இந்த ஒப்புவமைகள் கேட்டுக்கொள்ளும். யூதர்களின் சுயமனச்சாட்சிக்கு, அவர்களைத் தேவன் தேர்ந்து கொண்டார் என்பதைக் காட்டிலும் அதிகம் அடிப்படையான விஷயம் எதுவும் இல்லாதிருக்கலாம். இஸ்ரவேல் மக்கள் மாத்திரமே தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகத் தனித்து நின்றனர். மற்ற மக்களினங்கள் அவ்வாறு தேர்ந்துகொள்ளப்படவில்லை. தாமே ஒரு யூதராக இருந்த பேதுருவேகூட, முழு மனிதகுலத்தினாலும் பகிர்ந்து கொள்ளப்படாத அழைப்பு எதையும் இஸ்ரவேலுக்கு அனுமதிக்க மாட்டார். ஒவ்வொரு நாடு மற்றும் மக்களிலும் அழைப்பை ஏற்றவர்கள் கிறிஸ்துவின் மூலமாக “தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாக” உள்ளனர். கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும், “தேவன் பட்சபாதமுள்ளவரல்ல … எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்” என்று அப்போஸ்தலர் கூறியிருந்தார் (நடபடிகள் 10:34, 35).

இஸ்ரவேலின் வரலாற்றில் மிக ஆழமான வேர்களைக் கொண்ட கருத்துக்களையும் சொற்றொடர்களையும் எடுத்து அவற்றை இயேசு கிறிஸ்துவின் சபையாகிய “புதிய இஸ்ரவேல்” என்ற உடன்பாடுகளில் மறுபடியும் வெளிப்படுத்துதல் என்பது பேதுருவுக்கு வழக்கமானதாகவே இருந்தது. “தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி” என்ற முதல் பெயர் உரிச்சொல்/பெயர்ச்சொல் இணைவானது நியாயமானவகையில் நேர்ப்பொருள் கூறுவதாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களை ஏற்கனவே “தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்” என்று அழைத்திருந்தார். 2 எஸ்ட்ராஸ் என்று புரொட்டஸ்டன்டுகளால் பொதுவாக அழைக்கப்படும் தள்ளுபடி ஆகமம் ஒன்றில், மக்கள் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக இருந்தாலும், அசாதாரணமான பெருந்துன்பங்களைச் சகித்திருந்தனர் என்று எஸ்ரா தேவனிடத்தில் முறையிட்டார். தமது ஜெபத்தில் அவர், இஸ்ரவேல் மக்கள் தேவனால் “தேர்ந்துகொள்ளப்” பட்டிருந்த நிலையைத் தேவனுக்கு நினைவூட்டினார்.

> “என் எஜமானரும் கர்த்தருமானவரே, பூமியின் மீதுள்ள சகல காடுகளிலும் அவற்றின் மரங்களிலும், நீர் ஒரு திராட்சச் செடியைத் தேர்ந்துகொண்டீர்; இந்த முழு உலகிலும் உள்ள நிலங்களில் இருந்து நீர் ஒரு மனையைத் தேர்ந்துகொண்டீர்; உலகின் எல்லா மலர்களிலும் இருந்து நீர் ஒரு லில்லி மலரைத் தேர்ந்துகொண்டீர். கடலின் ஆழங்கள் யாவற்றிலும் இருந்து நீர் உமக்காக ஒரு நதியை நிரப்பியிருக்கிறீர், மற்றும் கட்டப்பட்டுள்ள

*எல்லா நகரங்களிலும் இருந்து நீர் உமக்குச் சொந்தமாக சீயோனைப் பிரித்து வைத்தீர். படைக்கப்பட்ட எல்லாப் பறவைகளிலும் இருந்து நீர் புறாவை உமக்காகப் பெயரிட்டீர், மற்றும் வடிவமைக்கப்பட்ட எல்லா மிருகங்களிலும் இருந்து நீர் செம்மறி ஆடு ஒன்றைத் தேர்ந்து கொண்டீர். எண்ணற்ற மக்களினங்களில் இருந்து நீர் ஒரு மக்களினத்தை உமக்காகத் தத்து எடுத்துக் கொண்டீர், தேர்ந்துகொள்ளப்பட்ட இந்த மக்களினத்திற்கு நீர் மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக அங்கீகரிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தீர்."*[9]

பேதுருவைப் பொறுத்தமட்டில், நேர்ப்பொருளில் இஸ்ரவேல் என்ற மக்களினம், தாங்கள் மாத்திரமே தேவனிடத்தில் சென்று சேரக் கொண்டிருந்ததாக உரிமைகோரிய வழியைக் கைவிடவேண்டி இருந்தது. அப்போஸ்தலர் தம்முடைய வாசகர்கள், யூதர்களானாலும் புறஜாதியாரானாலும், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகக் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

இரண்டாவது பெயர் உரிச்சொல்/பெயர்ச்சொல் இணைவாக "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்பது சிக்கலானதாக உள்ளது. "ராஜரீகமான" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*basileion* என்ற) வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறொரு இடமான லூக்கா 7:25ல் மாத்திரம் காணப்படுகிறது. அங்கு அது ஒரு பெயர்ச்சொல்லாக "அரசர்மாளிகைகளிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்ற சொற்றொடரில் பேதுருவின் வார்த்தை அமைப்பு நாம் எதிர்பார்க்கிறபடி இருப்பதில்லை. "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி" மற்றும் "பரிசுத்த ஜாதி" ஆகிய இரண்டு சொற்றொடர்களிலும் பெயர் உரிச்சொல் பெயர்ச்சொல்லைத் தொடருகிறது. (கிரேக்க மொழியில் பெயர் உரிச்சொல் தான் மாறுதல் செய்கிற பெயர்ச்சொல்லைப் பின்தொடர்ந்தோ அல்லது அதற்கு முன்னாலோ வரலாம்.) "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்ற சொற்றொடரின் விஷயத்தில், இது எதிர்மறையாக உள்ளது, அதாவது, "ராஜரீகமான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லானது பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வருகிறது. இம்மூன்று சொற்றொடர்களும் இணையாக இருக்க வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" (*basileion hierateuma*) என்பது இதன் அர்த்தம், சம அளவில் உறுதியில்லாத வகையில் குறிப்பிடப்பட்டுள்ள, LXX, (செப்துவஜிந்த்) வேதாகமத்தின் யாத்திராகமம் 19:6ல் இருந்து வருகிற சொற்றொடராகும்.

கவனமான சிந்தனைகள், இந்தச் சொற்றொடரை மொழிபெயர்ப்பாளர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம் என்ற சாத்தியக்கூறுக்கு வழிநடத்துகின்றன. லூக்கா 7:25ல் உள்ளது போன்று "ராஜரீகமான" என்ற வார்த்தையை "அரசர் மாளிகைகள்" என்று அர்த்தப்படும் பெயர்ச்சொல்லாக எடுத்துக்கொண்டு, இவ்விரு வார்த்தைகளுக்கு இடையில் ஒரு கமாவை வைத்து, "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், அரசர் மாளிகைகளாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் ..."[10] என்ற மொழிபெயர்ப்பை ஒருவர் அடைந்திருக்கலாம்.

பேதுரு கிறிஸ்தவர்களை, "ஆவிக்கேற்ற மாளிகையாக" கட்டப்படும் "ஜீவனுள்ள கற்கள்" என்று ஏற்கனவே அழைத்துள்ள நிலையில், இந்த விளக்கம் ஈர்ப்புடையதாக உள்ளது. இருப்பினும் *basileion* என்பது ஒரு பெயர் உரிச்சொல்லாக இருக்கலாம் என்பது உண்மையாக உள்ளது. "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்பது இதன் அர்த்தம் என்றால், அரசரின் ஊழியத்தில் அதாவது இயேசுவுக்குச் செய்யும் ஊழியத்தில், விசுவாசிகள் ஆசாரியத்துவம் கொண்டுள்ளனர் எனப் பேதுரு கூறுகிறார் என்றாகிறது. கிறிஸ்தவர்களுக்கு அவர் அரசருக்குரிய பண்புகளைக் குறிப்பிடுவதில்லை.

பேதுரு, தமது வாசகர்கள் தனித்தனியே ஆசாரியர்களாக இருந்தனர் என்றல்ல, ஆனால் "ஆசாரியக்கூட்டமாக" இருந்தனர் என்றே கூறினார். இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது. "ஆசாரியக்கூட்டம்" என்பதைப் பற்றிய சுயமான புரிந்துகொள்ளுதல், சமூகத்திற்குள் ஆசாரியத்துவப் பணிகளைச் செயல்படுத்துவதில் இருந்து தரவழைக்கப்படுகிறது. "ஆசாரியக்கூட்டம்" என்பது சபையை அதன் சங்கத்துவ முழுமையில் சிந்தித்தலின் விவரிப்பாக உள்ளது. இது "மக்களினம்" ["ஜாதி"] மற்றும் "நாடு" ("ஜனம்") ஆகியவற்றிற்கு இணையானதாக உள்ளது. இஸ்ரவேல் மக்களினத்திற்குப் புறம்பே ஆரோனின் ஆசாரியத்துவம் செயல்படுத்தப்படவில்லை என்பது போன்றே, விசுவாசிகள் கூட்டம் இன்றி "ஆசாரியத்துவத்தை" செயல்படுத்துதல் இல்லை. "ஆசாரியக்கூட்டம்" என்ற வார்த்தையைப் பேதுரு இருமுறை பயன்படுத்தினார் (2:5, 9), ஆனால் இவ்விரு இடங்களின் சந்தர்ப்பப் பொருள்களும் இவ்வார்த்தைகளை மாறுபட்ட வகையில் விளக்கப்படுத்துகின்றன. 2:5ல் பேதுரு, ஆசாரியத்துவத்தின் கடமைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார், அது தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்துதலாக இருந்தது. 2:9ல் ஆசாரியர்களின் கடமைகள் என்பதைக் காட்டிலும் அதிகமாக, ஆசாரியர்களாக இருத்தலின் சிலாக்கியம் என்பதே, "ஆசாரியக்கூட்டம்" என்பதன் கருத்தாக உள்ளது. பேதுருவின் ஒப்புவமைகள் யாவையும் சிலாக்கியங்களைப் பற்றியவையாக உள்ளன. ஏனென்றால், அவைகள் விசுவாசிகளின் சமூகத்தில் பகிரப்படுகின்றன, கிறிஸ்தவர்கள் "தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக, இராஜரீகமான குடிகளாக, ஆசாரியத்துவக் கூட்டமாக, பரிசுத்த ஜாதியாக" இருப்பதற்குத் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக எண்ணுகின்றனர்.

விசுவாசிகள் "தேவனுக்குச் சொந்தமான மக்களாக" இருப்பதாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சொற்றொடர் ஏசாயா 43:20, 21 உடன் ஒத்த தன்மையைப் பகிர்ந்துகொள்கிறது. ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தில் தேவன், "நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்தில் தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், ... இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்" என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். இஸ்ரவேல் மக்கள் தேவனால் தேவனுக்கென்று தாங்கள் உண்டாக்கப்பட்டதைப் புரிந்து கொண்டது போல, கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுக்குச் சொந்தமான மக்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும். அவரே அவர்களைத் தேர்ந்துகொண்டார். கிறிஸ்தவர்கள் தங்களைப் பற்றிய அவதூறுகளில் மூழ்கும்போது அல்லது அவர்களின் தோல்விக்காக

*அவர்களை அவிசுவாசிகள் ஏளனம் செய்யும் போது, தேவன் அவர்களைத் தம்முடையவர்கள் என்று உரிமை கோருதலை அவர்கள் நினைவுகூர வேண்டும். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களைப் பின்வருமாறு புகழும் அளவுக்குச் சென்றார்: "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; ... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13, 14).*

*ஒரு நோக்கத்திற்காகவே கிறிஸ்தவர்கள் தேவனுக்கு உரியவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர். மனித மீட்பு, பாவ மன்னிப்பு, நித்தியஜீவன் - இவையாவும் கிறிஸ்தவராக இருத்தலில் அடங்கியுள்ளன - என்பவை மனிதரின் மகிமைக்காக அல்ல ஆனால் தேவனுடைய மகிமைக்கானவையாகவே உள்ளன. அது உங்களை ... **வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு** என்ற நோக்கத்தை கொண்டுள்ளது. போட்டிநடைபெறும் களத்தில் இருக்கும் கருத்துக்களின் மத்தியில் கிறிஸ்தவம் தமது தேவைக்கு மிக நன்கு பொருந்தும் என்பதற்காக அதைத் தேர்ந்தெடுக்கும் நபர் ஏற்கனவே தோல்வி அடைந்து விட்டார். கிறிஸ்தவர்கள் தேவனுடைய "புண்ணியங்களை" அறிவிக்கும்படியாகவே தாங்கள் இருக்கிற பிரகாரம் உள்ளனர். மக்களை அவர்களின் நம்பிக்கையிழந்த நிலை மற்றும் பெரும்வருத்தம் ஆகியவற்றில் இருந்து கிறிஸ்து விடுவிக்கிறார், அல்லது பேதுரு கூறியபடி, **அந்தகாரத்தினின்று தம்முடைய** [தேவனுடைய] **ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரும்படியாக** [தேவன்] விடுவிக்கிறார். விசுவாசிகள் தங்களையே மறந்து தேவனுடைய மகிமையை நாடும்போது மாத்திரமே தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர் என்பது முரண்பாடு போலத் தோன்றும் உண்மையாக உள்ளது.*

***வசனம் 10.*** *அப்போஸ்தலருடைய வாசகர்கள் தேவனுக்குச் சொந்தமான மக்களாக இருந்தனர் என்ற விஷயத்தில் அவர்களின் தைரியத்தை மறுவலிவூட்டுவதற்குப் பேதுரு, பழைய ஏற்பாட்டில் மொழிநடை மற்றும் உருவகம் ஆகியவற்றை வரைவதைத் தொடர்ந்தார். ஜனங்கள் என்பதற்கு அவர் பயன்படுத்திய (laos) என்ற வார்த்தை, இஸ்ரவேல் மக்களுக்குப் பயன்படுத்த எதிர்பார்த்த வார்த்தையாக உள்ளது யூதரல்லாத மக்களைக் குறிப்பது (ethnos என்ற) வார்த்தையாகும். ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து பேதுரு வார்த்தை சொல்லுக்குச் சொல் அப்படியே குறிப்பிடவில்லை, ஆனால் இவ்வார்த்தைகள் அந்த எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசியின் சிந்தனை உலகில் இருந்து தரவழைக்கப்பட்டன. அவர் [பேதுரு], ஓசியாவின் வார்த்தைகளை அந்தத் தீர்க்கதரிசி பயன்படுத்திய அதே வகையில் மிகச்சரியாகப் பயன்படுத்தத் தாம் விரும்பியதற்கான எவ்வித குறிப்பும் இன்றி, தமது வாசகர்களின் சூழ்நிலைக்கேற்ப ஓசியாவின் வார்த்தைகளைத் தழுவியமைத்தார். ஓசியாவின் தீர்க்கதரிசனமானது, அவரது மனைவியும் பிள்ளைகளும் அடையாளங்களாகவும் முன்குறிப்பிடுதல்கள் ஆகவும் ஆகும் அளவுக்கு மிகவும் தனிப்பட்டதாக இருந்தது. அவரது மனைவி கோமேர் என்பவள் "சோரஸ்திரீ" யாக இருந்தாள் (ஓசியா 1:2), அவள் அவருக்கு ஒரு மகளைப் பெற்றாள், அந்த மகளுக்கு "லோருகாமா" என்று அவர் பெயரிட்டார் (ஓசியா 1:6) மற்றும் அவள் [கோமேர்] அவருக்கு ஒரு மகனைப் பெற்றாள், அவனுக்கு "என் ஜனமல்ல" என்று அவர் பெயரிட்டார் (ஓசியா 1:9). இஸ்ரவேலின் பாவத்தைத் தேவனுடைய இரக்கம் நிறைவில் வெற்றிகொண்டது. "நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம்*

*பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்" (ஓசியா 2:23).*

*ஓசியாவின் வார்த்தைகளைக் கடனாகப் பெற்ற பேதுரு, அவற்றில் தமது பெருமளவு வாசகர்களான புறஜாதிக் கேட்பாளர்களுக்கு மறு உறுதிப்பாடு பற்றிய ஒரு செய்தியைக் கண்டார்.* **முன்னேநீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்** *என்று அவர் கூறினார். இஸ்ரவேல் மக்களின் விக்கிரக ஆராதனை மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றிற்காக அவர்களுக்கு நியாயத்தீர்ப்பை அறிவிக்க பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியின் செய்தியில் இருந்து பேதுருவின் செய்தி மாறுபட்டுள்ளது. அதேவேளையில் தேவனுடைய இரக்கம் ஒருக்காலும் முடிவதில்லை என்று இஸ்ரவேல் மக்களுக்கு ஓசியா மறு உறுதிப்பாடு கொடுத்தார். தேவன் தமது மக்கள்மீது மறுபடியும் பரிதாபம் கொள்ளும் நாள் ஒன்றை அவர் முன்னதாகக் கண்டார்.*

*பேதுருவின் வார்த்தைகளில் நியாயத்தீர்ப்பு எதுவும் இல்லை என்ற விஷயத்தில் அது ஓசியாவின் செய்தியில் இருந்து மாறுபட்டது. புறஜாதியார் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் இரக்கம் ஆகியவற்றைப் பற்றி அதற்கு முன்பு அறியாதிருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் தேவனுடைய மக்களாகவே மாறியிருந்தனர். பேதுருவைக்காட்டிலும் மிகநுணுக்கமாகப் பவுல், ரோமர் 9:25, 26ல் ஓசியா தீர்க்கதரிசனம் பற்றிக் குறிப்பிட்டார்; ஆனால் பவுலைப் பொறுத்த மட்டில், ஓசியாவின் வார்த்தைகள், "யூதரிலிருந்துமாத்திரமல்ல, புறஜாதிகளிமிருந்தும்" தேவனுடைய மக்கள் உள்ளனர் (ரோமர் 9:24) என்பதைச் செயல்விளக்கப்படுத்தின. ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பேதுரு வாசித்திருந்தார் என்றால்- மற்றும் இதற்கு நல்லதொரு சாத்தியக்கூறு உள்ளது - பவுல் சிந்தனை அவருக்குத் தகவல் அறிவித்திருக்க வாய்ப்புள்ளது. பவுல் மற்றும் பேதுரு ஆகியோரின் எழுத்துக்களின் சொல் அமைவு மற்றும் காரண அறிவு ஆகியவற்றில் உள்ள சில ஒற்றுமைகள், இவ்விரு அப்போஸ்தலர்களும் பகிர்ந்துகொண்ட பொதுவான சிந்தனை உலகத்தைப் பண்புப்படுத்துகின்றன; ஆனால் அது, 1 பேதுரு மற்றும் ரோமருக்கு எழுதிய நிருபம் ஆகியவற்றிற்கு இடையில் அடிக்கடி வரும் தொடர்புக் கருத்துக்களுக்குக் குறிப்பாகக் காரணமாகாது.*

## *நடைமுறைப் பயன்பாடு*

### *நம்பிக்கையின் கல்லான இயேசு (2:4-8)*

*வேதாகமத்தை எழுதிய எழுத்தாளர்கள் வாழ்ந்த இடம் மற்றும் நிலப்பகுதி ஆகியவற்றைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் இருந்து கற்றுக்கொண்டு மதிக்கப்பட வேண்டிய, வேதாகமத்தைப் பற்றிய விஷயங்கள் உள்ளன. மத்திய தரைக்கடலில் கிழக்கு முனையானது வெப்பமான உலர்ந்த பகுதியாகும். நல்ல விவசாய நிலங்கள் அரிதாக இருந்தன. பாசனத்திற்குப் பயன்படும் பெரிய நதிகள் எதுவும் அங்கில்லை, மற்றும் அதன் பெரும்பான்மையான பகுதி பாலைவனமாக இருந்தது. பாலைவன நிலங்கள் வேதாகமத்தில்*

“வனாந்தரம்” என்று அழைக்கப்படுகின்றன.

இஸ்ரவேல் மக்கள் குடியேறும்படி அழைக்கப்பட்ட நிலமானது பல குறைவுகளைக் கொண்டிருந்தது. ஆனால் அதில் குன்றுகள் ஏராளமாக இருந்தன. இயற்கையான இந்த ஆதாரமூலத்தை பயனப்படுத்தும் வழிகளை இஸ்ரவேல் மக்கள் கண்டறிந்தனர் என்பதில் சிறிதளவே ஆச்சரியம் உள்ளது. அவர்கள் கற்களை ஆயுதங்களாகவும் கட்டிடம் கட்டும் பொருளாகவும் பயன்படுத்தினர். மேலும் அவர்கள் தங்களுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள உறவை விளக்கப்படுத்த, கல் ஒப்புவமைகளின் திடத்தன்மையையும் கண்டறிந்தனர் என்பதில் திகைப்பு எதுவும் இல்லை.

உபாகமம் மற்றும் சங்கீதங்கள் ஆகியவற்றில், தேவன் தாமே சிலவேளைகளில் கன்மலை என்று அழைக்கப்பட்டுள்ளார். அவர் இஸ்ரவேலுக்குக் கன்மலையாக, அசைக்க முடியாத, நிலைப்புத்தன்மை கொண்ட ஒருக்காலும் தவறாத பலமாக இருந்தார். மோசே, “கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள். அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்” என்று பாடினார் (உபாகமம் 32:3, 4).

நாட்டின் கன்மலைகளில் இருந்து தரவழைக்கக்கப்பட்ட ஒப்புவமைகள் புதிய ஏற்பாட்டிலும் தொடருகின்றன. இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு அறிக்கை செய்தபோது, அவரது அறிக்கை கன்மலையாக (கல்லாக) இருந்தது என்றும் அந்த நிச்சயமான அஸ்திபாரத்தின்மீது தமது சபையைக் கட்டுவதாகவும் கர்த்தர் கூறினார். “மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” (மத்தேயு 16:18). அப்போஸ்தலர், கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் பணியை விவரிக்கப் பாறையின் பேச்சு உருவகங்களைத் தரவழைத்தபோது, அவர் கர்த்தரின் ஒப்புவமையினால் ஏவப்பட்டிருக்கலாம்.

(1) *இயேசுவே கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய வழிக்கு நிச்சயமான வழிகாட்டியாகவும் மாதிரியாகவும் இருக்கிறார் என்பதால் அவர் கல்லாக இருக்கிறார்* (2:6). அவர் வழியைச் சுட்டிக்காட்டி, தமது சீஷர்கள் தேவனை எவ்வாறு சேவிக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணத்தையும் அளித்தார். இயேசு கல் என்பதைக் காட்டிலும் மேலாக இருக்கிறார்; அவர் ஒரு மூலைக்கல்லாக இருக்கிறார். பேதுரு தமது கருத்தை ஏற்படுத்த ஏசாயா 28:16 ன் வார்த்தைகளைத் தரவழைத்தார்: “இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்.”

இஸ்ரவேல் நாட்டில் அன்றும் இன்றும் மரங்கள் பல இருந்ததில்லை. மரம் என்பது அசாதாரணமான மற்றும் விலையுயர்ந்த கட்டுமானப் பொருளாக உள்ளது. மரவேலைப்பாட்டிற்குப் பதிலாக, இஸ்ரவேலில் இருந்த கைவினைஞர்கள் திறன்வாய்ந்த கல் கொத்தர்கள் ஆனார்கள். அவர்கள் கல்லை கற்காரை தேவைப்படாத அளவுக்கு மிகவும் நுணுக்கமாக வடிவமைத்தனர். இயேசு தச்சு வேலை செய்பவராக இருந்தார் என்று பொதுவாக நினைக்கப்

பட்டிருக்கையில், *tektōn* என்ற கிரேக்க வார்த்தையை, "கல் கொத்தர்" என்று மொழிபெயர்த்தலே மிகச்சிறந்த வகையாக இருக்கும் என்று இப்போது பலர் நம்புகின்றனர். இன்றைய நாட்களில் எருசலேமில், சட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருவர் கட்டிடம் கட்ட விரும்பினால், அவர் அதைக் கற்களாலேயே கட்டியாக வேண்டும். எருசலேம் என்பது கற்களால் கட்டப்பட்ட நகரமாக உள்ளது. பழங்கால உலகிலும் இதுவே உண்மையாக இருந்தது.

பேதுரு வாழ்ந்த காலத்தின்போது, உலகம் முழுவதிலும் இருந்த யூதர்கள், எருசலேமில் மகா ஏரோது கட்டிய மாபெரும் தேவாலயத்தைப் பற்றி அறிந்திருந்தனர். அதன் மாட்சிமையையும் அழகையும் யூதரல்லாதவர்கள் கூட பாராட்டிப் புகழ்ந்தனர். சாலோமோன் அரசரால் கட்டப்பட்டிருந்த தேவாலயம் இருந்த மலைக்குன்றின் இயற்கையான மேடுகளை ஏரோது விரிவாக்கியிருந்தார். அவர் நியமித்திருந்த கட்டுமானப் பணியாளர்கள், அணைச்சுவர் ஒன்றைக் கட்டுவதற்கு கனமான கற்களைப் பயன்படுத்தினர். ஏரோது நியமித்த கட்டிடப்பணியாளர்கள், தேவாலயத்தை மாத்திரமல்ல ஆனால் அதன் உயர்ந்த முற்றத்தைச் சுற்றிலும் ஒரு பெரிய மண்டபத்தையும் கட்டுவதைச் சாத்தியமாக்கினர். இவையாவையும் கற்காளாலேயே கட்டப்பட்டன. அவற்றில் பலவற்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர். ஏரோது தாம் செய்வித்த கற்களின் மூலைப்பகுதி களைச் சுற்றிலும் தனிப்பட்ட வகையில் வளைவுகளைக் கொண்டு குறிப்பிடச் செய்தார். அவற்றை அடையாளம் காண்பதில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை.

ஏசாயா 28:16ஐப் பேதுரு குறிப்பிடும் வசனங்களுக்கு முன்னதாக அவர், கல் பற்றிய ஒப்புவமையை விரிவாக்கினார். கிறிஸ்து ஒரு கல்லாக இருப்பதால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு கருத்தறிவில் அவரது திடத்தன்மையில் பங்கேற்பதாகப் பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் தங்கள் கர்த்தருடன் இணைந்து தேவன் வாழும் இல்லத்தை ஏற்படுத்துகின்றனர். ஒவ்வொரு விசுவாசியும் அந்த வீட்டில் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார் (காண்க 1 பேதுரு 2:4, 5).

கிறிஸ்தவர்கள் பாறைகளாகவும் இருக்கின்றனர். இன்றைய நாட்களில் சமூகத்தில் அஸ்திபாரங்கள் நொறுங்குபவையாகக் காணப்படுகின்றன. இருப்பினும், கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் காண்பவர்களுக்கு இந்தப்பிரச்சனை இருப்பதில்லை. கிறிஸ்தவக் கணவர்கள் தங்கள் மனைவியரைக் கனம் செய்கின்றனர். மனைவியர் தங்கள் கணவர்களை மதிக்கின்றனர். அவர்கள் இருவரும் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற அறிவிலும் போதனையிலும் வளர்கின்றனர். அவர்கள் தங்கள் அயலகத்தவர்களை நன்கு நடத்துகின்றனர். அவர்களின் வார்த்தைகள் பாறை போன்று திடமானவையாக இருக்கின்றன, நேர்மை என்பது அவர்களின் அடையாளக் குறியாக உள்ளது. அவர்கள் வாழும் வழியானது அவர்களை அசைக்கப்பட இயலாதவர்களாகக் குறிக்கிறது. இயேசு திடமான பாறையாக உள்ளார், அவரே கிறிஸ்தவ விசுவாசம், நம்பிக்கை மற்றும் தைரியமான இளைப்பாறுதல் ஆகியவற்றின் பலத்த அஸ்திபாரமாக இருக்கிறார் என்று பேதுருவின் வார்த்தைகள் கருத்துக் தெரிவிக்கின்றன, பூமியதிர்ச்சிகள் கட்டிடத்தை அசைக்கலாம், ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வை எதன்மீது கட்டி எதன்மீது தங்கள் நம்பிக்கையை வைக்கிறார்களோ, அந்த

அஸ்திபாரத்தைப் பாதாளத்தின் வாசல்கள் அசைக்க முடியாது. நூற்றாண்டுகள் கடந்துள்ளன, மக்களினங்கள் வந்து செல்கின்றனர், மலைகள் உயர்ந்து கடலுக்குள் உருகி விழுகின்றன, ஆனால் கற்பாறையான கிறிஸ்து, இஸ்ரவேலின் தேவனைப் போன்றே, என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்து நிற்கிறார் (காண்க சங்கீதம் 102:25-27).

(2) *இயேசு அஸ்திபாரக் கல்லா இருக்கிறார், ஆனால் அவர் தள்ளப்பட்ட கல்லாகவும் இருக்கிறார்* (2:7). மூலைக்கல் என்ற வகையில் இயேசுவிடம் இருந்து, இன்னொரு ஒப்புவமையான தேவனுடைய வீட்டில் அஸ்திபாரக்கல் என்பதற்குப் பேதுரு கடந்து சென்றார். இவ்வேளையில் அவர் சங்கீதம் 118:22ல் இருந்து கருத்தைத் தரவழைத்தார். யூதர்களை இயேசு எதிர்நின்று அவரை அவர்கள் புறக்கணித்தபோது, இயேசுதாமே இந்த சங்கீதத்தைக் குறிப்பிட்டிருந்தார். "இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்" (மத்தேயு 21:42).

இயேசு சங்கீதம் 118ஐக் குறிப்பிட்டபோது, அவர் யூத மக்களினத்தின் தலைவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். வேதவசனத்தின் மாணவர்கள் என்ற வகையில் அவர்கள், எல்லாருக்கும் மேலாக, தேவனுடைய கிறிஸ்துவைப் புரிந்து உணர்ந்து ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள், அவரைத் தள்ளிவிட்டு ஏளனம் செய்தனர், மற்றும் அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு அவர்களே காரணக்கருவிகளாக இருந்தனர். இயேசு தள்ளப்பட்ட கல்லாக இருந்தார். சங்கீதத்தின் விரிவான நடைமுறைப் பயன்பாட்டைப் பேதுரு ஏற்படுத்தியதாகக் காணப்படுகிறது. யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தனர், ஆனால் அதற்கும் அப்பால், உலகத்து மக்களிலேயே அதிக ஞானமும் மேன்மையும் உள்ளவர்கள் அவரைப் புறக்கணித்தனர்.

தேவனே இயேசுவை வீட்டின் மூலைக்கல்லாக்கினார். அவரை மனிதர்கள் புறக்கணித்தனர் மற்றும் அவர்கள் அவரைத் தொடர்ந்து புறக்கணித்துக் கொண்டுள்ளனர். உலகத்தின் சிறிய அற்பமான விஷயங்களைத் தேவன் எடுத்தார். அவர் ஒரு தாழ்மையான கலிலேய ஊழியக்காரரை சபையின் மூலைக்கல்லாக்கக் கூடியவராக இருந்தார். அப்போஸ்தலர்களான பேதுருவும் பவுலும் சாதாரண சிந்தை கொண்டவர்களாக இருந்தனர். இன்னொரு சந்தர்ப்பப் பொருளில் பவுல், பலவீனமும் சிறுமையுமானவர்கள் மூலமாகத் தேவன் கிரியை செய்கிறார் என்று முரண்பாட்டு மெய்யுரையாக நியாயமாக வெளிப்படுத்தினார். உலகமானது அதன் அரசர்களை, அதன் வீண்பகட்டை, அதன் ஆடம்பரத்தைக் கொண்டிருக்கட்டும், பவுல் சிறுமைப்பட்டவர்களுடன் அமர்ந்து அவர்களுடன் சேர்ந்து, தேவன் தமக்கு உதவிசெய்ய, அவர் இந்த உலகத்தை வெற்றிகொள்வார். "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2 கொரிந்தியர் 12:10). என்று அவர் கூறினார். தொடர்ந்து அப்போஸ்தலர், "ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்"

என்றும் கூறினார் (2 கொரிந்தியர் 13:4).

(3) *இயேசு இடறுதலுக்கான கல்லாக, குற்றம் உணர்த்தும் கல்லாக இருக்கிறார்* (2:8). பேதுரு, ஏசாயா 28:16ஐக் குறிப்பிட்டுக்காட்டி, இயேசு மூலைக்கல்லாக இருக்க வேண்டும் என்பதைக் கண்டறிந்தார். அவர் சங்கீதம் 118:22ஐக் குறிப்பிட்டுக்காட்டி, அவர் தள்ளப்பட்ட கல்லாக இருக்க வேண்டும் என்பதையும் கண்டறிந்தார். இந்த இடத்தில் அப்போஸ்தலர் ஏசாயா தீர்க்கதரிசனத்திற்குத் திரும்பினார். "அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார்" (ஏசாயா 8:14). இதேபோன்ற கூற்று ஒன்றைப் பவுல் விளக்கப்படுத்தினார்: "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:23). பவுலுக்குக் குறிப்பாக இடறுதலின் கன்மலையாக இருந்தது சிலுவையே ஆகும் (காண்க கலாத்தியர் 5:11).

ரோமர்கள் அதிகாரத்தை மதித்தனர். அறிவும் உலகஞானமும் கொண்ட ரோமர்கள் கிறிஸ்தவம் பற்றி முதலில் கேள்விப்பட்டபோது, அது ஒரு நேர்த்தியான நகைச்சுவையாக இருந்தது என்று நினைத்தனர். கிறிஸ்தவர்களின் இந்த மீட்பர் ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டிருந்தார். அவர் ஆராதனைக்குத் தகுதிவாய்ந்தவர் என்று யூகிப்பது எவ்வளவு மதியீனமாக இருக்கும்! யூதர்களுக்கு இயேசு மற்ற காரணங்களினால் ஒரு இடறுதலுக்கேற்ற கல்லாக இருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்பதற்கான எந்த எதிர்பார்ப்பையும் குறைத்துப்போடும் வசனப்பகுதி ஒன்று இருந்தது. "[மரத்திலே] தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்" என்று மோசே கூறினார் (உபாகமம் 21:23; காண்க கலாத்தியர் 3:13). இயேசு முக்கியமான ஒருவராக இருந்தார் என்ற கருத்தில், யூதரும் புறஜாதியாரும் ஒன்றுபோலவே இடறினர். அவர்களைப் பொறுத்தமட்டில், சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதர் தேவனுடைய குமாரனாக இருக்க முடியும் என்று நினைத்தல் சிந்தையற்றதாக இருந்தது.

இயேசு இடறுதலுக்கான கல்லாக இருந்தார் என்று பேதுரு பேசியபோது, அவர் வலியுறுத்தத்தை மாற்றினார். உலக மக்கள் தங்கள் பாவங்களை நேசித்ததாலும் தேவனுடைய பங்காக இராதிருக்க விரும்பியதாலும் இயேசுவின் போதனைகள் மீது இடறல் அடைந்தனர். அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களைப் பின்தொடர விரும்பினர் (காண்க 1 பேதுரு 2:8). உலகத்தில் பல மக்களுக்கு, சிலுவையானது தொடர்ந்து இடறுதலுக்கான கல்லாக உள்ளது. ரோமப் பேரரசின் உலகம் போன்றே, இன்றைய நாட்களின் மக்கள் செல்வம், புகழ் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைத் தேடும்போது, அவர்களுக்குச் சிலுவை பொருத்தமற்றதாக உள்ளது. அவர்கள் கூறினாலும் கூறாவிட்டாலும், மக்கள் பலரின் வாழ்வானது சிலுவை ஒரு இடறுதலுக்கான கல்லாக உள்ளது என்றே அறிவிக்கிறது.

தொகுப்புரை. பழைய ஏற்பாட்டில் இருந்து தரவழைத்த வகையில் பேதுரு, தமது உலகத்தின் கற்களை, இயேசுவைப் பற்றியும் அவருடன் நமது உறவு பற்றியும் நமது புரிந்து கொள்ளுதலை வளப்படுத்தப் பயன்படுத்தினார்

*(1) இயேசு நற்தன்மை மற்றும் தேவபக்தி ஆகியவற்றிற்கான தகுதியான மற்றும் மாறாத மாதிரியாக இருப்பதால், அவர் ஒரு கல்லாக (கல்லைப்போன்று உறுதியாக) இருக்கிறார். (2) இயேசு, தள்ளப்பட்ட கல்லைப் போன்று இருக்கிறார். (3) இயேசு இடறுதலுக்கான கல்லாக குற்றப்படுத்தும் பாறையாக இருக்கிறார்.*

---

குறிப்புகள்

[1]*இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வரலாற்றாளரான சுயூட்டோனியஸ் என்பவர், கிலவுதியு பேரரசர் காலத்தின் போது ரோமாபுரியில் வாழ்ந்த யூதர்களின் மத்தியில் ஏற்பட்ட கலகம் பற்றிய எழுதும்போது, வார்த்தைகளைக் குழப்பியிருக்கலாம். இந்தக் கலகமானது, Chrēstos (கிரேக்கு மொழி) என்பதற்குச் சமமான அர்த்தம் கொண்ட Chrestus (இலத்தீன்) என்ற ஒருவரால் தூண்டப்பட்டது என்று சுயூட்டோனியஸ் எழுதினார். கிறிஸ்துவின் செய்தி அறிமுகப்படுத்தப்பட்ட போது யூத சமூகத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. சுயூட்டோனியஸ் அவர்கள் நிச்சயமற்ற வகையில் பெயர்களைக் குழப்பியிருப்பதாகக் தோன்றுகிறது.* Suetonius *The Lives of the Caesars: Claudius 25.4. என்ற புத்தகத்தில் காணவும்.* [2]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude, Black's* New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 84. [3]*வால்ட்டர் பாவர் அவர்கள் காலத்திய இலக்கியத்தின் பயன்பாட்டைக் குறிப்பிட்டு, 1 பேதுரு 2:2ல் இவ்வார்த்தை "ஆவிக்கேற்ற" என்று மிகச்சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 598.) *இருப்பினும், பாவர் அளித்த குறிப்புகளிலும்கூட, இவ்வார்த்தை காரணம் அல்லது பகுத்தறிவு ஆகியவற்றின் சிறு கூறில் இருந்து நீக்கப்பட்ட தூய்மையான "ஆவிக்கேற்ற" என்பதை அர்த்தப்படுத்துவதில்லை. மொழிபெயர்ப்பாளர்கள் இதை "ஆவிக்கேற்ற" என்று தரவழைக்கத் தீர்மானித்ததால், இந்த கிரேக்க வார்த்தை தனது சிந்தனை நிறைந்த பகுத்தறிவை இழப்பதில்லை.* [4]*பேதுருவின் பெயரான Petros என்பது "கல்" என்று அர்த்தப்படுகையில், "கல்" என்பதற்கு 2:8 தவிர, இவ்வசனங்கள் முழுவதிலும் lithos என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. பேதுரு இந்த வசனங்களை எழுதுகையில், தமது சொந்தப் பெயரின் அர்த்தத்தைச் சிந்தித்தார் என்று கூற வாய்ப்பு இல்லை.* [5]Joachim Jeremias, "a Okrogwniai aos," in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 1:792. [6]*"மாளிகை" ("வீடு") என்ற சொற்றொடர் 1 மற்றும் 2 நாளாகமங்கள், எஸ்தர், நெகேமியா மற்றும் சில தீர்க்கதரிசனப் புத்தகங்களில், பல இடங்களில் ஆலயத்தைக் குறிக்கிறது. சங்கீதங்களில் இதன் பயன்பாடு, குறிப்பிட்ட அந்த சங்கீதம் எழுதப்பட்ட காலத்தைப் பொறுத்து, ஆசாரிப்புக் கூடாரத்தையோ அல்லது தேவாலயத்தையோ குறிக்கக் கூடும்.* [7]Ernest Best, *1 Peter,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 105. [8]Francis Wright Beare, *The First Epistle of Peter: The Greek Text with Introduction and Notes,* 3d ed. (Oxford: Basil Blackwell, 1970), 124. [9]2 Esdras 5:23–27 (REB). [10]See Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillan & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 166.